



Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்


## நக்கல்நமசிவாயம்





மலர் : 01, இதழ் : 52 சார்வரி வருடம், ஆவணி மாதம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (01.09.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை - 12, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20


# கோட்டா - மார்க் டி எஸ்பெர் தொலைபேசியில் பேச்சு

## முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு



அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் மார்க் டி எஸ்பெர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.



02

# 20ஆவது திருத்த உத்தேச சட்ட வரைவு சட்டமா அதிபர் திணைக்கள அங்கீகாரத்திற்கு கையளிப்பு!

## நாளைய அமைச்சரவையிலும் சமர்ப்பிக்க ஏற்பாடு

இரட்டை பிரஜாவுரிமையை கொண்ட ஒருவர் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற முடியாது என அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்திலுள்ள சரத்தை இரத்து செய்வது உட்பட்ட புதிய பல்வேறு சரத்துக்களுடனான அரசியலமைப்பின் உத்தேச 20ஆவது திருத்த சட்டவரைவு நேற்று சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

02





# முன்னாள் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி காலமானார்

புதுடில்லி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி காலமானார். அவருக்கு வயது 84. கடந்த 10ஆம் திகதி புதுடில்லி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பரிசோதனையில் அவருக்கு மூளையில் இரத்தம் உறைந்திருந்தமை கண்டறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவருக்கு மூளையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இரத்த....

02



# கல்கிஸ்ஸயில் அடகுக்கடை நகைகளை கொள்ளையிட்ட பொறியியலாளர் பொலிஸாரால் கைது!



## திருட்டுக்கு ஐடியா கொடுத்த தனியார் நிறுவன பெண் முகாமையாளரும் சிக்கினார்

கல்கிஸ்ஸ - இரத்மலானை பிரதான வீதியிலிருந்த அடகுக்கடை ஒன்றில் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் கைத் தொலைபேசிகளை கொள்ளையிட்ட மென்பொருள் பொறியியலாளர் மற்றும் அவருக்கு ஆலோசனை வழங்கிய தனியார் நிறுவனமொன்றின் பெண் முகாமையாளர் ஆகியோர் கல்கிஸ்ஸ பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த 24 ஆம் திகதி அடகுக்கடையின் கூரையை பிரித்து இறங்கிய இந்த இளைஞன் கொள்ளையிட்ட நகைகளில் 54 பவுண் மற்றும் பத்து இலட்ச ரூபா பணம்...

02

# மரணதண்டனை பெற்ற பிரேமலால் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கும் அதிகாரம் கிடையாது

## சட்டமா அதிபர் அறிவிப்பு



மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் சிறைவாசம் அனுபவித்துவரும் பிரேமலால் ஜயசேகரவிற்கு (சொக்கா மல்லி) நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்க சட்ட ரீதியில் அதிகாரம் கிடையாது என சட்ட மாஅதிபர், நீதி அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெற்று முடிவடைந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்ட பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்றத்திற்கு அழைத்து செல்வது தொடர்பில் சிறைச்சாலை திணைக்களம், நீதி அமைச்சிடம் வினவியுள்ளது.

இந்த கோரிக்கை குறித்து நீதி அமைச்சு சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் வினவிய நிலையிலேயே சட்ட மாஅதிபர் திணைக்களம் இந்த...

02

# பிரேமலாலின் நாடாளுமன்ற அங்கத்துவத்தை சட்டமா அதிபரால் தீர்மானிக்க முடியாது!

## அமைச்சர் வாசுதேவ திட்டவட்டம்

மரணதண்டனை பெற்ற பிரேமலால் ஜெயசேகரவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கலாமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு இல்லை என்று நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பாக ஒரு முடிவை சபாநாயகர் அல்லது நாடாளுமன்றத்தால் மட்டுமே எடுக்க முடியும், ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம்...

02



# இணைய ஊடகவியலாளர் சதுரங்க டி சில்வா கைது!



இணைய ஊடகவியலாளர் டெஸ்மண்ட் சதுரங்க டி சில்வா குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்தின் அடிப்படையில் ஊடகவியலாளரைக் கைதுசெய்த குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் அவரது கணினியையும் கைப்பற்றிச்...

02

# பதிவுக்காக 150 அரசியல் கட்சிகள் விண்ணப்பம் நேர்முகத் தேர்வில் 40 மனுக்கள் நிராகரிப்பு

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தேசப்பிரிய தகவல்



தேர்தல் பதிவுக்காக 2020ஆம் ஆண்டு 150 அரசியல் கட்சிகள் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிக்கின்றார்.

இவ்வாறு விண்ணப்பித்துள்ள கட்சிகளில் 40 அரசியல் கட்சிகள் முதலாவது நேர்முகத் தேர்விலேயே நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த 40 கட்சிகளுக்கும் அடிப்படை தகைமைகள் இல்லாமையினாலேயே அவை நிராகரிக்கப்பட்டதாக அவர் கூறுகின்றார். இதேவேளை, தேர்தலுக்காக முன்னிலையாகின்ற சுயாதீன கட்சிகளுக்கான கட்டுப்பணத்தை ஒரு கோடி ரூபா...

02

# உடலை வலிமையாக்கும் லேகியங்கள் விற்பனைப் போர்வையில் அரங்கேறிய ஹெரோயின் வர்த்தகம்



## பாகிஸ்தானிலிருந்து இலங்கையூடாக தமிழகத்திற்கு போதைப்பொருள் கடத்திய அங்கொட லொக்கா!

தமிழகத்தில் தலைமறைவாக வாழ்ந்துவந்த நிலையில் உயிரிழந்த பாதாள உலகத்தின் முக்கிய புள்ளி அங்கொட லொக்கா ஊட்டச்சத்து உணவுகள் என்ற போர்வையில் போதை மருந்தை விற்பனை செய்துள்ளதாக தமிழக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

02

# கொழும்பு துறைமுக நகரத்தை நிர்மாணிக்கும் சீன நிறுவனம் அமெரிக்காவின் கறுப்புப் பட்டியலில்!



சீனா கொம்யூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி (சி.சி.சி.சி) நிறுவனத்தை அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் இணைத்தமை ஆசியாவில் இராஜதந்திர சீர்குலைவை ஏற்படுத்துமென இராஜதந்திர நோக்கர்களை மேற்கோள்காட்டி சீனாவின் மோர்னிங் போஸ்ட் ஊடகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா கறுப்பு பட்டியலில் இணைத்துள்ள சீனா கொம்யூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி, தற்போது உலகமெங்கும் 157 நாடுகளில் 923 திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. இலங்கையில் துறைமுக நகரத் திட்டத்தையும் அதுவே நடைமுறைப்படுத்துகிறது.

சீனா கொம்யூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி மற்றும் துணை நிறுவனங்கள், அதனுடன் கூட்டு சேர்ந்த உள்ளூர் நிறுவனங்களையும் பொருளாதாரத்தடை எவ்விதம் பாதிக்கப் போகிறது....

02

| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 1014 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி | S | 24 40 47 59 |
| சனிதா வாசனா | 3353ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 19ஆம் திகதி | T | 38 58 61 62 |
| அத கோட்டிபதி | 1015 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 19ஆம் திகதி | E | 04 09 12 75 |
| சுப்பர் போல் | 1195 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | L | 30 36 39 77 |
| அத கோட்டிபதி | 1016 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | A | 18 19 21 62 |
| அத கோட்டிபதி | 1017 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 21ஆம் திகதி | R | 12 29 35 49 |
| கோட்டிபதி கப்ருக | 614 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 21ஆம் திகதி | I | 05 52 70 71 |
| சுப்பர் போல் | 1197 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 23ஆம் திகதி | U | 11 18 50 73 |
| கோட்டிபதி கப்ருக | 615 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 23ஆம் திகதி | C | 29 57 68 72 |
| அத கோட்டிபதி | 1020 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 24ஆம் திகதி | Z | 38 58 66 76 |
| சனிதா வாசனா | 3355 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 24ஆம் திகதி | S | 02 06 29 71 |
| சுப்பர் போல் | 1198 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 24ஆம் திகதி | O | 07 16 21 73 |
| அத கோட்டிபதி | 1021 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 25ஆம் திகதி | O | 01 26 34 40 |
| கோட்டிபதி கப்ருக | 616 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 25ஆம் திகதி | D | 38 60 63 79 |

## கடும் காற்றுடனான மழையால் சேதமடைந்தன வீட்டின் கூரைகள்



(வவுனியா)

வவுனியா கணேசபுரம் பகுதியில் நேற்று மதியம் பெய்த கடும்காற்றுடன் கூடிய மழையால் பல வீடுகளின் கூரைத்தகடுகள் காற்றில் அடித்துச்செல்லப்பட்டுள்ளதுடன் பயன்தரும் மரங்களும் முற்றாக சரிந்துள்ளன.

அந்தவகையில் கணேசபுரத்தில் வீசிய கடுங்காற்றினால் 34 வீடுகளும், சமயபுரத்தில் 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. குறித்த வீடுகளின் கூரைத்தகடுகள் தூக்கி வீசப்பட்டமையால் வீடுகளுக்குள் தண்ணீர் சென்றுள்ள நிலையில், மக்கள் இருப்பதற்கு வசிப்பிடமின்றி அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, பலமான காற்று வீசியதால் வாழை, தென்னை போன்ற பயன்தரும் மரங்களும் முறிந்துவிழுந்துள்ளன. இதேவேளை, பாதிப்பு விபரங்கள் தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல்களை சேகரித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. வவுனியாவில் பரவலாக இன்றைய தினம் இடிமின்னலுடன் கூடிய மழை பொழிந்துள்ளதுடன். சில பகுதிகளில் கடுமையான காற்றும் வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டரை வயது மகனுக்கு துப்பாக்கி பயிற்சியளித்த தந்தை;

## எதிர்பாராத விதமாக துப்பாக்கி வெடித்ததில் பலி

(பதுளை)

பசறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெமேரியா தோட்ட, மாத்தென்ன பிரிவுக்கு அண்மையில் அமைந்துள்ள ரிட்டிக்காதோவ கிராமத்தில் உள்ள வீடொன்றில் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட நாட்டுத் துப்பாக்கி (கட்டுத் துவக்கு) தவறுதலாக இயங்கி வெடிப்பு சம்பவம் ஏற்பட்டதில் சுனில் சாந்த (வயது 29) என்ற குடும்பஸ்தர் பலியாகியுள்ளார்.

அத்துடன் அவருடைய இரண்டரை வயது நிரம்பிய மகன் படுகாயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 29 திகதி இரவு இடம்பெற்றுள்ளது. இவ்விடயம் குறித்து தெரியவருவதாவது, பிபிலேகமையைச் சேர்ந்த இந்நபர் சம்பவ தினம் குடிபோதையில் இருந்ததுடன், தனது இரண்டரை வயதையுடைய மகனுக்கு துப்பாக்கியை இயக்குவது குறித்து கற்றுக்கொடுத்துள்ளார். கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், அத்துப்பாக்கி எதிர்பாராத வகையில் வெடித்ததினால், தந்தையும், மகனும் காயமுற்றனர்.

இதையடுத்து இருவரும் பசறை அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர். அங்கு ஆரம்ப சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்விருவரும் பதுளை அரசினர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். அங்கு அவ்விருவருக்கும் தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இச்சிகிச்சைகளில் பலனின்றி தந்தை மரணமானார்.

இச்சம்பவம் குறித்து பசறை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பாலித்த செனவிரட்ன தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்காகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞானந்த ஞானரத்ன தேரரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டபோது....

### 20ஆவது...

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த கையோடு நாளை 2ஆம் திகதி கூடவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் 20ஆவது திருத்த வரைவு யோசனைகள் முன்வைக்கப்பட்டு, அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு அமைச்சரவையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு, எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. இரட்டை பிரஜாவுரிமையை கொண்ட ஒருவர் நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்க முடியாது என்ற சரத்து இரத்து செய்யப்படவுள்ளமை இதில் முக்கிய அம்சமாகும். ஒக்டோபர் மாத இறுதிக்குள் 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற அரசு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முன்னாள்....

உறைவு அகற்றப்பட்டது. ஆனால், அதன் பின்னர் அவரது உடல்நிலை மிகவும் மோசமானது. தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பிரணாப் முகர்ஜி, கோமா நிலைக்கு சென்றார்.

இந்நிலையில், நேற்று மாலை அவர் காலமானார். கொரோனா தொற்றும் அவருக்கு இருந்ததாக சொல்லப்பட்டது.

இது தொடர்பாக அவரது மகன் அபிஜித் முகர்ஜி வெளியிட்ட டுவிட்டர் பதிவு: டொக்டர்களின் கடுமையான முயற்சி, இந்திய மக்களின் பிரார்த்தனைக்கு பிறகும், எனது தந்தை பிரணாப் முகர்ஜி காலமாகிவிட்டார் என்பதை கனத்த இதயத்துடன் தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

அவருக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். பாரத ரத்னா, பத்ம விபூஷண் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். கடந்த 2012 முதல் 2017 வரை ஜனாதிபதி பதவி வகித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவராக விளங்கிய பிரணாப் முகர்ஜி, கடந்த 1982-1984, 2009-2012, ஆண்டுகளில் நிதி அமைச்சராகவும், 2004- 2006 வரை பாதுகாப்பு அமைச்சராகவும், 2006-2009, 1995-1996 ஆண்டுகளில் வெளியுறவு அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 1980 முதல் 1985 ராஜ்யசபா தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

### இணைய...

சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இணையதளமொன்றின் ஆசிரியராக கடமையாற்றிவந்த சதுரங்க டி சில்வா நீதித்துறையை அவமதிக்கும் வகையில் செய்தி ஆக்கங்களை பிரசுரித்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### பிரேமலாலின்...

வழக்கின் எல்லைக்குள் செயல்படுவதால் நீதிமன்றங்களுக்கு ஆஜராக வேண்டுமா இல்லையா என்பதை மட்டுமே தீர்மானிக்க முடியும் என்றார் வாசு. நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகர தனது மரண தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளதால், மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் இறுதி முடிவு வரும் வரை அவருக்கு தண்டனை வழங்குவதற்கான ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது சட்டமா அதிபரும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனை தெரிவித்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகர நாடாளுமன்ற அமர்வுக்கு சமூகமளிக்க முடியாதென சட்டமா அதிபர் திணைக்களம் நாடாளுமன்ற பொதுச்செயலாளர் மற்றும் நீதி அமைச்சுக்கு தெரிவித்ததற்கு பதிலளிக்கும் வகையில் வாசுதேவ இதனை தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த வெள்ளிக்கிழமை (28), பிரேமலால் ஜெயசேகரவை நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள வசதியேற்படுத்தும்படி சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் செப்டெம்பர் 08 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் அவர் கலந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டில் கஹவத்தையில் துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் இரத்தினபுரி உயர் நீதிமன்றம் பிரேமலால் ஜெயசேகரவுக்கு ஜூலை 31 ஆம் திகதி மரண தண்டனை விதித்தது.

இருப்பினும், ஜெயசேகர ஓகஸ்ட் 05 ஆம் திகதி பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மாவட்டத்தில் இரண்டாவது அதிக விருப்பு வாக்கை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கல்கிஸ்ஸயில்...

வாகனத்தின் குத்தகை கொடுப்பனவு மற்றும் இதர செலவுகளுக்காக தேவைப்பட்ட பணத்தை பெறும் நோக்கில் இந்த கொள்ளையை நடத்த திட்டமிட்ட பெண் முகாமையாளர் தனது நிறுவனத்தில் தொழில் செய்த பொறியியலாளரான இளைஞருக்கு அந்த ஆலோசனையை தெரிவித்துள்ளார்.

இருவரும் நல்ல நண்பர்களென்பதால் கொள்ளை திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கொள்ளையிடப்பட்ட கைத்தொலைபேசியை விற்பனை செய்வதற்கு மேற்படி இளைஞர் முயன்றபோதே இந்த கொள்ளை அம்பலமாகியுள்ளது. கைத்தொலைபேசியின் உரிமையாளருக்கு விசேட அலர்ட் (சமிக்ஞை) சென்றதால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

கல்கிஸ்ஸ பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மரணதண்டனை...

விடயத்தை கூறியுள்ளது.

நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள தனக்கு, நாடாளுமன்ற உறுப்பினராக சத்திய பிரமாணம் செய்ய இடமளிக்குமாறு பிரேமலால் ஜயசேகர, சிறைச்சாலை திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். வாக்காளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உள்ள தகுதிகள் தொடர்பில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சரத்துக்களை மேற்கோள்காட்டி சட்டமா அதிபர், நீதி அமைச்சுக்கு இந்த விடயத்தை தெளிவூட்டியுள்ளார்.

இதன்படி, பிரேமலால் ஜயசேகரவிற்கு நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியபிரமாணம் செய்ய இயலுமை கிடையாது என சட்ட மாஅதிபர் சுட்டிக்காட்டியுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களம் கூறியுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினராக சத்திய பிரமாணம் செய்வதற்கு பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்றத்திற்கு அழைத்து வருமாறு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த 28ஆம் திகதி சிறைச்சாலை திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் எழுத்துமூலம் தனக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய குறிப்பிட்டிருந்தார்.

இந்த உத்தரவு தொடர்பில் எழுத்துமூலம் தமக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர், அது குறித்து நீதி அமைச்சின் ஆலோசனைகளை பெற்று நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சி செயற்பாட்டாளர் ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டு அவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பிரேமலால் ஜயசேகர குற்றவாளியாக நீதிமன்றத்தினால் அடையாளம் காணப்பட்ட நிலையில், இரத்தினபுரி மாவட்ட மேல் நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பதிவுக்காக...

வரை அதிகரிக்கும் வகையில் புதிய அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிய முடிகின்றது.

மேலும், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியொன்று முதலாவது தேர்தலில் குறிப்பிடத்தக்களவு வாக்குகளை பெறத் தவறும் பட்சத்தில், இரண்டாவது முறை நடைபெறுகின்ற தேர்தலில் குறித்த கட்சி 50 இலட்சம் ரூபா பணத்தை கட்டுப்பணமாக செலுத்த வேண்டும் என்ற வகையிலும் அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு தொடர்பிலான குழுவின் தலைவர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கு அடிப்படையற்ற தகைமைகளை கொண்ட சில சுயாதீன குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒரு தரப்பின் தேவைக்காக தேர்தலில் போட்டியிடுவதை தவிர்க்கும் வகையில் இந்த கட்டுப்பண அதிகரிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

### உடலை...

பிரதீப் சிங் என்ற பெயரில் கடந்த 2018ஆம் ஆண்டு தொடக்கம் கோவையில் வசித்து வந்த அங்கொட லொக்கா, கடந்த ஜூலை மாதம் 4ஆம் திகதி மர்மமான முறையில் உயிரிழந்தார். இதுதொடர்பாக இலங்கையை சேர்ந்த அம்மானிதாஞ்சி, மதுரையை சேர்ந்த பெண் வழக்கறிஞர் சிவகாமி சுந்தரி மற்றும் திருப்பூரை சேர்ந்த தியானேஸ்வரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

தற்போது இவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வரும் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் பல்வேறு அதிர்ச்சிகரமான தகவல்களை திரட்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, ஜிம்மில் பயன்படுத்தப்படும் ஊட்டச்சத்து உணவுகள் போர்வையில் அங்கொட லொக்கா ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களை இலங்கையிலும் இந்தியாவிலும் விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது. இதற்காக பெரிய குழுவே இயங்கியுள்ளது. அதிலும் குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து இலங்கை வழியாக தமிழகத்திற்கு ஹெரோயின் போதைப்பொருளை கடத்துவதில், ராமேஸ்வரத்தை சேர்ந்த படகு உரிமையாளர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் விசாரணையை மேலும் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் மேலும் பலர் சிக்குவர் என தமிழக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### கோட்டா...

கோட்டாபய ராஜபக்ஷவுடனான தொலைபேசி உரையாடலின் போது கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தை வெற்றிகரமாக கையாண்டமைக்காக அவர் தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமீபத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தல்களுக்காக பாராட்டுகளை தெரிவித்துள்ள அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் இலங்கை அரசாங்கத்தினை நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை விவகாரங்களில் தொடர்ந்தும் முன்னேற்றத்தை காணுமாறு வலியுறுத்தியுள்ளார்.

தொலைபேசி உரையாடலின் போது அனைத்து நாடுகளினதும் இறைமையை உறுதி செய்யும் சுதந்திரமான வெளிப்படையான இந்தோ - பசுபிக்கிற்கான அர்ப்பணிப்பை இரு தலைவர்களும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேசமயம் பரஸ்பர பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக அறியமுடிந்தது.

### கொழும்பு....

என்பதை உடனடியாக கணிக்க முடியா விட்டாலும், ஆசிய பிராந்தியத்தில் உடனடி தாக்கம் ஏற்படலாமென கணிக்கப்படுகிறது.

மலேசியாவின் 10.5 பில்லியன் அமெரிக்க டொலர் கிழக்கு கடற்கரை ரயில் இணைப்பு, இலங்கையில் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் போர்ட் சிட்டி, மற்றும் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவிற்கு வெளியே 10 பில்லியன் அமெரிக்க டொலர் விமான நிலையம் ஆகியவை சீனா கொம்யூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி (சி.சி.சி.சி) நடைமுறைப்படுத்தும் வெளிநாட்டு திட்டங்களில் அடங்கும்.

சீனாவின் பல பில்லியன் டொலர் பெறுமதியான உட்கட்டமைப்பு திட்டங்களில் சி.சி.சி.சி பங்கேற்றதன் காரணமாக ஆசிய பொருளாதாரங்களில், அந்த நிறுவனம் உட்பொதிந்துள்ளது.

சி.சி.சி.சி கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டதன் மூலம், அந்த நிறுவன திட்டங்களுடன் தொடர்புடைய நாடுகள் நெருக்கடியை சந்திக்கலாம்.

இலங்கையில் சி.சி.சி.சியின் இருப்பு கடந்த காலங்களில் சர்ச்சையைத் தூண்டியது. 2018 ஆம் ஆண்டில் நியூயோர்க் டைம்ஸ் வெளியிட்ட செய்தியில், நிறுவனத்தின் துணை நிறுவனமான சீனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனத்திடமிருந்து சுமார் 7.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 2015 ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரச்சாரத்திற்கு விநியோகிக்கப்பட்டது.

ராஜபக்ஷ அந்த தேர்தலில் தோற்றார். ஆனால் அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றார்.சி.சி.சி.சி மற்றும் ராஜபக்ஷக்கள் நியூயோர்க் டைம்ஸ் குற்றச்சாட்டுகளை மறுக்கிறார்கள். போர்ட் சிட்டி திட்டத்தைத் தவிர, ராஜபக்ஷக்களின் கோட்டையான ஹம்பாந்தோட்டையிலும் சீனா ஹார்பர் ஒரு துறைமுகத்தை கட்டியது.

சீனா நடைமுறைப்படுத்தும் Belt and Road திட்ட மூலோபாயம் குறித்து மேற்கத்திய விமர்சகர்கள் தொடர்ந்து விமர்சித்து வருகிறார்கள். சீனாவின் இந்த உட்கட்டமைப்பு திட்டம் “கடன்-பொறி இராஜதந்திரத்தின்” ஒரு பகுதியாக உள்ளது என குறிப்பிடப்படுகிறது.

அமெரிக்கா கறுப்பு பட்டியலில் இணைத்த 24 சீன நிறுவனங்களில் ஐந்து சி.சி.சி.சி துணை நிறுவனங்கள் அடங்கும். அமெரிக்க வர்த்தகத் துறை கடந்த புதன்கிழமை இந்த அறிவிப்பை விடுத்தது.

இது உரிமங்கள் இல்லாமல் அமெரிக்க இறக்குமதியைப் பெற நிறுவனங்களுக்கும் தடை விதிக்கிறது.

## கறுப்பின போராட்டக்காரர்கள் - ட்ரம்ப் ஆதரவாளர்கள் மோதல்

# வன்முறைக் களமாகும் அமெரிக்கத் தேர்தல் களம்: போர்க்களமானது போர்ட்லாந்து; ஒருவர் சுட்டுக்கொலை



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களம், முன்னெப்போதும் இல்லாத வகையில் போராட்டக்களமாக மாறியிருக்கிறது.

போர்ட்லாந்தில் கறுப்பின மக்களுக்கு ஆதரவான போராட்டக்காரர்களுக்கும், ட்ரம்ப் ஆதரவாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற வன்முறையில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்தனர்.

அமெரிக்காவின் மினியாபோலிஸ் நகரில்




கறுப்பினத்தைச் சேர்ந்த 46 வயதான ஜோர்ஜ் பிளாய்ட் என்பவர் பொலிஸ் அதிகாரியால் கழுத்தில் மிதித்துக் கொல்லப்பட்டார். இதை எதிர்த்து கடந்த 3 மாதங்களாக அமெரிக்கா முழுவதும் பல்வேறு போராட்டங்களும், வன்முறைச் சம்பவங்களும் நடந்துவருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துக்கொண்டிருக்கும் இந்நிலையில், விஸ்கான்சின் மாகாணத்திலுள்ள கனோஷா என்ற இடத்தில் ஜேக்கப் பிளேக் (வயது 26) என்ற கறுப்பின வாலிபரை பொலிஸார் 7 முறை துப்பாக்கியால் சுட்டதில், அவர் படுகாயமடைந்தார். இதனால், கறுப்பின மக்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் நடத்தும் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

இந்தப் போராட்டங்கள், ஜனாதிபதித் தேர்தலில் 2ஆவது முறையாக போட்டியிடும் ட்ரம்பின் வாக்கு வங்கியை கடுமையாக பாதித்துவருகிறது. ஏற்கனவே, ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பிடெனுக்கும், துணை ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் கமலா ஹாரிசுக்கும் ஆதரவு பெருகிவருகிறது. இவர்களின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக இருப்பதால், ட்ரம்ப் தனது பிரசாரத்தை அதிதீவிரமாக்கி இருக்கிறார். மேலும், பிடென் ஆட்சிக்கு வந்தால் அமெரிக்காவில் வன்முறை அதிகமாகிவிடும் என்று எச்சரித்தும் வருகிறார்.

இந்நிலையில், பிளாய்ட் படுகொலைக்கு எதிராக போர்ட்லாந்தில் தொடர்ந்து 3 மாதங்களாக போராட்டம் நடத்தப்பட்டுவருகிறது. 2 நாட்களுக்கு முன் நடந்த குடியரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் பேசிய ட்ரம்ப், "வன்முறைகளால் சூழப்பட்ட நகரமாக போர்ட்லாந்து மாறி வருகிறது" என்று குறிப்பிட்டார். இந்நிலையில், சனிக்கிழமை ட்ரம்பின் ஆதரவாளர்கள் 600 வாகனங்களில் போர்ட்லாந்தின் மையப்பகுதிக்குள் பேரணியாக நுழைந்தனர். அவர்களை போராட்டக்காரர்கள் வீதியின் குறுக்கே நின்றும், பாலங்களில் தடுப்பு ஏற்படுத்தியும் பேரணியை தடுத்தனர். இதைத் தொடர்ந்து, ட்ரம்ப் ஆதரவாளர்கள் – போராட்டக்காரர்கள் இடையே மோதல் வெடித்தது. இருதரப்பினரும் பயங்கரமாக தாக்கிக்கொண்டனர்.

வாகனங்கள் எரிக்கப்பட்டன. வன்முறையில் ஈடுபட்ட பலரை பொலிஸார் கைதுசெய்தனர். பொதுமக்கள் நகரத்துக்குள் வரவேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டனர். இந்நிலையில், தென்கிழக்கு ஆல்டர் தெருவில் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. பொலிஸார் அங்கு விரைந்தனர். அங்கு, மார்பில் துப்பாக்கிக்குண்டு பாய்ந்த நிலையில், இரத்த வெள்ளத்தில் ஒருவர் விழுந்து கிடந்தார். அவருக்கு சிகிச்சையளிக்க முயற்சிக்கப்பட்டது. ஆனால், அதற்குள் அவர் இறந்தார். இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியது யார் என்பது தெரியவில்லை. பொலிஸார் யாராவது செய்தார்களா? மோதலில் ஈடுபட்டவர்கள் சுட்டார்களா? என விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த மோதலில் இருதரப்பையும் சேர்ந்த பலர் காயமடைந்தனர். இச்சம்பவம் பற்றி தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



## உலக வலம்

# நண்பேன்டா...



உலக பணக்காரர்களில் ஒருவரான பில் கேட்ஸ் தனது நெருங்கிய நண்பரும் தொழிலதிபருமான வாரன் பஃபெட்டின் 90ஆவது பிறந்தநாளுக்கு தானே கேக் தயாரித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பதிவிட்டுள்ள டுவீட்டில் 30 வயதானவர்களின் மனக்கூர்மையையும், 10 வயது குழந்தையின் குறும்பு சிரிப்பையும் 6 வயதுடையவர்களின் உணவுப் பழக்கத்தையும் வாரன் கொண்டிருப்பதாக பாராட்டியுள்ளார்.

மேலும், அலுவலகத்திலிருந்து தான் அதிகம் டயல் செய்த தொலைபேசி எண்களில் ஒன்று மனைவி மெலிண்டாவுடையது. மற்றொன்று வாரனுடையது என்றும் வலைத்தள பக்கத்தில் பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

# போராட்டக்களத்தில் மலர்ந்த காதல்



பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ பதவி விலக வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்துக்கு இடையே போராட்டக்காரர் ஒருவர் திருமணம் செய்துகொள்ள லவ் புரபோஸ் செய்த சுவாரஸ்ய நிகழ்வு அரங்கேறியது.

கிழக்கு ஐரோப்பாவிலுள்ளது பெலாரஸ். 1922ஆம் ஆண்டில் ரஷ்யப் புரட்சியின்போது விடுதலைபெற்று சுதந்திர நாடானது. இங்கு, கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 6ஆவது முறையாக அலெக்சாண்டர் லுகாஷென்கோ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலில் மிகப்பெரியளவில் மோசடி நடந்துள்ளது.



இதனால் அந்நாட்டு ஜனாதிபதி பதவி விலகக்கோரி ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போராட்டம் நாளுக்குநாள் வலுத்துவருகிறது.

இந்நிலையில், தலைநகர் மின்ஸ்க்கில் நடைபெற்ற போராட்டக்களத்தில் பெண் ஒருவரிடம் போராட்டக்காரர் ஒருவர் திருமணம் செய்துகொள்ளும் நோக்கில் மண்டியிட்டு தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார். இதை சற்றும் எதிர்பார்க்காத அந்தப் பெண் இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடிப்போய் கண்கள் கலங்கியபடி, போராட்டக்காரரின் காதலை ஏற்றுக்கொண்டார். சுற்றிலும் திரண்டிருந்த போராட்டக்காரர்கள் கைதட்டி ஆரவாரமிட புதுக்காதலர்கள் தமது அன்பை பரிமாறிக்கொண்டனர்.

# பதவி துறந்தார் ஷின்சோ அபே! ஜப்பானின் அடுத்த பிரதமர் யார்?



உடல்நலக்குறைவால் ஷின்சோ அபே பிரதமர் பதவியிலிருந்து விலகிய நிலையில் ஜப்பானின் புதிய பிரதமர் யார் என்பது குறித்த தகவல்கள் செப்டெம்பர் 17ஆம் திகதி அறிவிக்கப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஜப்பானின் பிரதமராக நீண்டகாலம் பதவி வகித்தவர் ஷின்சோ அபே. பெருங்குடல் புண்ணால் பாதிக்கப்பட்ட அவர் அதற்கான சிகிச்சைகளை மேற்கொண்டுவந்தார். இந்நிலையில், அண்மையில் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டதில் ஷின்சோ அபேவுக்கு காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டது. உடல்நிலையைக் காரணம் காட்டி பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக ஷின்சோ அபே அறிவித்தார். இந்நிலையில், லிபரல் டெமாகிரேடிக் கட்சி தலைமையில் அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுக்குழு இன்று கூடவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 13-15ஆம் திகதிக்குள் கட்சியிலிருந்து புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜப்பான் பிரதமராக இருந்த ஷின்சோ அபே அரசியல் குடும்பத்தில் பிறந்தவர். அவருக்கு தற்போது வயது 65. லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவராக அதிக காலம் பதவி வகித்தவர் என்ற பெருமைக்கு ஷின்சோ அபே சொந்தக்காரர். ஜப்பான் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சியடைந்ததில் முக்கிய பங்கு கொண்டவர். இப்படி தனது நாட்டுக்கு பல நல்ல திட்டங்களையும், நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர். 2006ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை பிரதமர் பதவி வகித்து சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் 2012ஆம் ஆண்டு மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோடிக்கு 70

## 17இல் ஒவ்வொரு மாநிலத்திலும் 70 இடங்களில் பிரம்மாண்ட ஏற்பாடு



கொரோனாவால இரண்டாம் முறையாக ஆட்சியில் அமர்ந்து ஓராண்டு நிறைவை பா.ஜ.க.வினர் சரியாக கொண்டாட முடியவில்லை. அதனால், பிரதமர் மோடியின் 70ஆவது பிறந்த நாளை அமர்க்களமாகக் கொண்டாட கட்சி முடிவெடுத்துள்ளது.

இம்மாதம் 17ஆம் திகதி மோடியின் பிறந்த நாள். ஒவ்வொரு மாநிலத்திலும் 70 இடங்களில் பிரமாண்ட கொண்டாட்டம் நடத்த கட்சித் தலைமை உத்தரவிட்டுள்ளது.

"கோவில்களில் பூஜை, ஏழைகளுக்கு உதவி, கொரோனா பாதுகாப்புக்கு முகக்கவசம், பழங்கள் வழங்குவது, இரத்த தானம் என பல நல்ல விடயங்களை இந்த பிறந்த நாளில் தொண்டர்கள் மேற்கொள்ளவேண்டும். அதேசமயம், கொரோனா சம்பந்தப்பட்ட பாதுகாப்போடு இதை செய்யவேண்டும்" – என கட்சித் தலைவர் நட்டா அறிவித்துள்ளார்.

## இன்று பூமியைக் கடக்கும் எஸ்ட்ராய்ட் 2011



"எஸ்ட்ராய்ட் 2011' என்றழைக்கப்படும் சிறு கோள் இன்று பூமியைக் கடந்துசெல்லும்" என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த முறை இந்த சிறுகோள் பூமியைக் கடந்து சென்றபோது நான்கு நாட்கள் அதனைக் காணமுடிந்தது. நிலவைவிட பூமிக்கு அருகாமையில் கடந்துசெல்வதால் அதனைக் காணமுடிவதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த சிறுகோள் பூமிமீது மோதி ஆபத்துண்டாகலாம் என்ற அச்சம் பரவியது. ஆனால், அத்தகைய ஆபத்து ஏதுமில்லை என்றும் விஞ்ஞானிகள் விளக்கமளித்துள்ளனர். 45 ஆயிரம் மைல்கள் தூரத்தில் மிகவும் பாதுகாப்பான முறையில் இந்த சிறுகோள் பூமியைக் கடந்துசெல்லும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.




# அமெரிக்காவை புரட்டிப்போட்ட லாரா: 40 இலட்சம் பேர் நிர்க்கதி

அமெரிக்காவை 280 கி.மீ. வேகத்தில் தாக்கிய லாரா சூறாவளியால் 40இலட்சம் பேர் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன், 15பேர் உயிரிழந்துள்ளனர். புயல் ஏற்படுத்திய பெரும் சேதத்தைப் பார்வையிட்டுள்ள அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதனை பேரழிவாக அறிவித்துள்ளார்.

அட்லாண்டிக் பெருங்கடலில் உருவான லாரா புயல் மெக்சிக்கோ வளைகுடா வழியே 27ஆம் திகதி அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தைத் தாக்கியது. மணிக்கு 280 கிலோமீற்றர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியதில் பல்வேறு இடங்களில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் அடியோடு சாய்ந்தன. பல இடங்களில் வீட்டுக்கூரைகள் பிய்த்துக்கொண்டு காற்றில் பறந்தன. சில இடங்களில் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. சூறாவளியால் பல இடங்களில் 25 செ.மீ. அளவில் கனமழை பெய்தது. புயல் பாதிப்பால் லூசியானா, டெக்சாஸ், அர்க்கன்சாஸ் மாகாணங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் இன்னும் இலட்சக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

லாரா புயல் கடந்த பாதையில் வசித்த 40இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்களில் ஆபத்தான இடங்களில் தங்கியிருந்த 6 இலட்சம் பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதனால் பெருமளவில் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது. ஜெனரேட்டர்களின் பாதுகாப்பற்ற செயற்பாட்டிலிருந்து வெளியேறிய கார்பன் மோனாக்சைடால் உயிரிழந்தவர்கள் உட்பட 15 பேர் மட்டுமே புயலுக்கு உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே லாரா புயல் பாதிப்புகளை நேரில் ஆய்வுசெய்த ஜனாதிபதி ட்ரம்ப், லூசியானா மாகாணத்தில் ஏற்பட்டுள்ள புயல் பாதிப்பைப் பேரழிவாக அறிவித்துக் கையெழுத்திட்டுள்ளார்.

தமிழன் | தமிழன்

தமிழன் தினசரி மற்றும் வாராந்த பத்திரிகையில் 6.2cm X 3cm அளவில் சிறுவிளம்பரங்களை பிரசுரித்திட 600 ரூபா மட்டுமே.

தொடர்புகளுக்கு:
077 693 0739, 076 139 3805

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020 செப்டெம்பர் 01ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# அழிந்துவரும் ஐ.தே.க.!

கடந்த பொதுத் தேர்தலோடு சிதறி சின்னாபின்னமாகிப் போயிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைத்துவப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியிருக்கிறது. ரணிலின் உறவினரான ருவன் விஜயவர்தன கடந்த வாரம் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்று இந்தப் போட்டிக்குத் தயாராகியிருக்கிறார். ரணிலின் ஆசியும் அவருக்கே இருக்கிறதென சொல்லப்படுகிறது. குடும்ப ஆட்சியென ராஜபக்ஷக்களை விமர்சித்த ரணில் இன்று தனது உறவொன்றை தலைமைப்பதவியில் அமர்த்த அரும்பாடுபடுகிறார். மறுபுறம் முன்னாள் கிரிக்கெட் கெப்ரன் அர்ஜுன ரணதுங்க தலைமைப்பதவிக்கு தாமும் தயாரென கூறியிருக்கிறார். வஞ்சிக்கோட்டை வாலிபன் திரைப்படத்தில் வீரப்பாவின் வெண்கலக் குரலால் வரும் ‘சபாஷ் சரியான போட்டி’ என்ற வசனமே இப்போது நினைவுக்கு வந்துபோகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டெழ முடியாத நிலைமையில் இருந்தாலும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவால் அதனை மீண்டும் தலைநிமிரச் செய்யமுடியுமென்று அக்கட்சியின் பலர் நம்புகின்றனர். அதனை அவர்கள் ரணிலிடம் கூறியபோது, பரிசீலிக்கலாம் என்று கூறிய ரணில், பின்னர் அப்படியே அந்தர்பல்டி அடித்து, கரு ஜயசூரிய கட்சியின் அடிப்படை உறுப்பினராகவே இல்லாதவர், அவரால் எப்படி தலைமைப்பதவிக்கு ஆசைப்படமுடியும் என்று கேட்டு கருவை கட்சிப் பக்கமே தலைவைத்து படுக்கவேண்டாம் என்பதுபோல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இழுத்தடிப்புச் செய்வதற்கும், ஆளைக் கழற்றிவிடுவதற்கும் ரணிலுக்கு சொல்லியா கொடுக்கவேண்டும்?

கடந்த காலங்களில் கட்சிக்குள் தலைமைத்துவப் பிரச்சினைகள் எழுந்தபோதெல்லாம் அதனை தீர்த்துவைக்க ரணிலால் அடிக்கடி அழைக்கப்பட்ட கரு ஜயசூரிய, இப்போது கட்சியிலே இல்லை என்று அதே ரணிலால் கூறப்படுவதைப் பார்க்கையில், சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதிலிருந்து பிரிந்துசென்ற ஐக்கிய மக்கள் சக்திக்கும் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவை பெறவேண்டிய தேவை உள்ளது. கரு அந்த விடயத்தில் முன்னிலையில் இருக்கிறார். ஒருகாலத்தில் இராணுவ அதிகாரியாக, பின்னர் இராஜதந்திரியாக, பின்னர் அரசியல்வாதியாக வலம்வந்த கரு, சிங்கள மக்களினதும் பிக்குமாரினதும் நன்மதிப்பைப் பெற்றவர். குறிப்பாக, அந்த 52 நாட்கள் அரசியல் பிரளய தருணங்களில் சபாநாயகராக அவர் ஆற்றிய பணிகள் மக்கள் மனங்களில் நிறைந்துள்ளன.

கருவின் நிர்வாகத் திறமை, தலைமைத்துவப் பண்பு, விட்டுக்கொடுக்காத போக்கு, உறுதியான நிலைப்பாடு, மென்மையான செயற்பாடுகள் என்பனவற்றுக்கப்பால் சிங்கள மக்கள் மத்தியில் அவரின் பெயருக்கு இதுவரை அபகீர்த்தி எதுவுமில்லாதது முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால், அவை எதனையும் கணக்கிற்கொள்ளாமல், இத்துணை தோல்விகள், பின்னடைவுகளுக்கு மத்தியிலும் கட்சித் தலைமைப் பதவியை கட்டிப்பிடித்துக்கொண்டு, அப்படி விட்டுக்கொடுத்தாலும் உறவினர் ஒருவருக்குத்தான் விட்டுக்கொடுப்பேன் என்றவாறு ரணில் செயற்படுவதெல்லாம் துயர்மிக்கது.

ரணில் தலைமைப் பதவியில் தொடர்ந்தால் அல்லது அவரின் உறவினர் ஒருவருக்கு இதனை கைமாற்றினால் அந்த அதிருப்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் எஞ்சியிருக்கும் எச்சசொச்சங்கள் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துவிடக்கூடும். கரு ஜயசூரிய தலைவராக வந்தால் மீண்டும் தாய்க்கட்சிக்கே வந்துவிடுவோம் என்ற சஜித் அணியின் உறுப்பினர்கள் திரும்பிவராமல் தனிவழி பயணத்தைத் தொடரக்கூடும். மீண்டும் திரும்பி வருமளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கும் இல்லையென்பது வேறுகதை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவியை வைத்துக்கொண்டு கையாலாகாத்தனமாக செயற்பட்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வளர முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன எந்தளவு இடம்விட்டோரோ அதற்கு கிஞ்சித்தும் குறைவின்றி ஐக்கிய மக்கள் சக்திக்கு இடமளிக்கும் வகையில் ரணில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். பழைமைவாய்ந்த கட்சிகள் பழைமை வாய்ந்த சிந்தனைகளால் ஊறித்திளைத்து உப்புச் சப்பில்லாமல் இருப்பதால் தேர்தல்களில் கூட மக்கள் அவற்றை அடியோடு நிராகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தலைமைத்துவப் பிரச்சினைகளால் தட்டுத் தடுமாறி, சிக்கிச் சீரழிந்துவரும் ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த மாகாண சபைத் தேர்தலில் விலாசமில்லாமல் போகும் நிலைக்கே செல்லக்கூடும். இப்போதுள்ள கள நிலவரம் அதற்கே கட்டியம் கூறுகின்றது. அரசியலில் வேண்டுமானால் ரணில் நரியாக இருக்கலாம். ஆனால், நிர்வாகத்தில், சரியான தீர்மானங்களை எடுப்பதில் அவர் பூச்சியமே!




# காணாமல்போன உறவுகளின் போராட்டம் தொடர்கதையா?

- பிரசன்னா காசிலிங்கம் -

சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, இராணுவத்தினரினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் ஆர்ப்பாட்டப் பேரணி, பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

“இன அழிப்பு குற்றங்களுக்கு உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை”, “சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாகவே விசாரணை”, “இராணுவத்தினராலும் துணை ஒட்டுக்குழுக்களினாலும் கைதுசெய்யப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது” போன்ற பதாகைகளை ஏந்தியும் காணாமலாக்கப்பட்டவர்களின் புகைப்படங்களை ஏந்தியும் உறவினர்கள் கண்ணீர் மல்க ஜனநாயக முறையில் பேரணியை முன்னெடுத்திருந்தார்கள்.

யுத்தம் முடிவடைந்து 11 ஆண்டுகள் கடந்துவிட்டநிலையிலும், படையினரினால் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு இன்றுவரைக்கும் நீதி கிட்டவில்லை. அல்லது காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்றுகூடத் தெரியாமல் காணமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் காணப்படுகின்றார்கள்.

இந்நிலையில்தான் கடந்த காலங்களில் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்திருந்த உறவுகள், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திடமிருந்தும், சர்வதேசத்திடமிருந்தும் நீதியை வேண்டி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளருக்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் அனுப்பப்பட்டது. இப்போராட்டத்தில் பல அரசியல் தலைவர்களும் பங்குபற்றியிருந்தார்கள். அதேபோல், தாயக உறவுகளின் இந்தப் பேரணிக்கு ஆதரவாக புலம்பெயர் தேசங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இறுதி யுத்த காலப்பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஐக்கிய நாடுகள் சபையே இறுதி யுத்த குற்ற அறிக்கையில் ஏற்றுக்கொண்டுள்ளது. அப்போது ஆட்சியிலிருந்தவர்கள் தற்போதைய ஆட்சியாளர்கள்தான். இதனால்தான், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அரசாங்கத்தின் மீது கேள்விகளை எழுப்பியவண்ணம் பேரணியை நடத்தியுள்ளார்கள். மனிதகுலத்துக்கெதிரான குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டமை, இனப்படுகொலை, பாலியல் குற்றங்கள் போன்றவற்றுக்காக நீதி வேண்டி தமிழ்மக்கள் 2012இல் இருந்து இன்றுவரையிலும் போராடி வருகின்றார்கள். இந்நிலையில், ஐ.நா.வினதும் சர்வதேசத்தினதும், கடும் அழுத்தத்தினால் 2013ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவினால் ஓய்வுபெற்ற நீதிபதி பரணகம தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவில் காணாமல் போனவர்கள் தொடர்பில் 20 ஆயிரம் எழுத்துமூல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. ஆனால், காணாமல்போனவர்களுக்குக் காத்திரமான எவ்வித தீர்வுகளோ நிவாரணங்களோ கிடைக்கவில்லை. மாறாக, காணாமல்போனவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்க முன்வந்திருந்தது மஹிந்த அரசாங்கம்.

2015ஆம் ஆண்டு செப்டெம்பரில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது கூட்டத்தொடரில், 30–1இல் வலியுறுத்தப்பட்ட தீர்மானத்தில் போர்க்குற்றங்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு உள்ளக விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட்டது. இதற்காக ஒன்றரை வருடகால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், காலத்தை மட்டுமே இழுத்தடித்த நல்லாட்சி அரசாங்கத்திற்கு, 2017 மற்றும் 2019இல் கால நீடிப்பை வழங்கியது ஐக்கிய நாடுகள் சபை. எவ்வித உள்ளக விசாரணைப் பொறிமுறைகளை முன்னெடுக்காமல், சர்வதேசத்தை ஏமாற்றும் முகமாக காணாமல்போனவர்களின் எவ்வித ஒப்புதலுமின்றி காணாமல்போனோர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன. காணாமல்போனவர்களுக்கான ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தலைமையில் ஏழு பேர் கொண்ட ஆணையாளர்கள் உள்ளடங்கிய குழு காணாமல் போனவர்களின் உறவினர்களிடம் விசாரணையையும் கருத்துகளையும் பதிவுசெய்திருந்தது. இவ்வாறான ஆணைக்குழுக்கள் மீது தமக்கு ஒரு துளிகூட நம்பிக்கையில்லையென்று காணாமல்போனவர்களின் உறவினர்கள் புறந்தள்ளியிருந்தார்கள். வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை அச்சுறுத்தியும் அவர்களின் ஏழ்மை நிலைகளைப் பயன்படுத்தியும் காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையில் இறங்கியிருந்தது காணாமல்போனோர் அலுவலகம்.

> **“தமிழ் மக்கள், அரசாங்கத்தின் மீதும் உள்ளக விசாரணைப் பொறிமுறை மீதும் நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதை அவர்களினால் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 44ஆவது கூட்டத்தொடர் நடைபெறுவதற்கு முன்பதாக, காணாமல்போனவர்களுக்கு நீதி கிட்டுவதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவவேண்டுமென்பது உறவினர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.”**



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாட்டில் காணாமல்போனவர்கள் எவரும் இல்லை. இரகசிய இராணுவ முகாம்கள் எதுவும் இல்லையென்று ஆணித்தரமாகத் தெரிவித்திருந்தார். காணாமல்போனவர்கள் என்று எவரும் இல்லையென்று தெரிவிக்கும் முன்னாள் ஜனாதிபதி, ஏன் இவ்வாறான ஆணைக்குழுக்களை நியமித்து உறவினர்களை ஏமாற்றுகின்றார் என்ற கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்திற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துணைபுரிந்துள்ளார்கள் என்றும் இப்பேரணியில் கலந்துகொண்டவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளமையும் கவனிக்கப்படவேண்டியதொன்றாகும்.

இந்நிலையில், கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 30–1 இற்கு வழங்கிய இணை அனுசரணையாளர் என்ற தீர்மானத்திலிருந்து இலங்கை அரசாங்கம் வெளியேறியுள்ளது. இவ்வாறு இலங்கை அரசாங்கம் வெளியேறியுள்ளமை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நியாயமான நீதி கிட்டும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இதனால்தான், இறுதி யுத்தத்தில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்களுக்கான விசாரணையில் முழுமையான உள்ளகப் பொறிமுறையை தமிழ்த்தரப்பு எதிர்த்துவருகின்றது. அதேபோல், காணாமல்போனவர்களைப் பற்றி விசாரிக்கும் ஆணைக்குழுவிலும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளை உள்ளடக்கவேண்டுமென்று உறவினர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றனர். வடக்கு, கிழக்கில் நடைபெறும் விசாரணைகளை கண்காணிப்பதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகமொன்றை தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிறுவவேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தில் காணாமல்போனவர்களைப் பற்றி மட்டுமல்லாமல், 1970ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்தப்படுகின்றது. ஜே.வி.பி.யின் இனக்கலவரத்திலும் பலர் காணாமல் போயுள்ளார்கள்.

குறிப்பாக, இறுதி யுத்தத்தின்போதுதான் பல ஆயிரக்காணக்கான அப்பாவித் தமிழர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். பலர் தங்களது உயிர்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இராணுவ முகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் சரணடைந்தார்கள். இதன்போது, அவர்களிடம் முழுமையான விபரங்களைப் படையினர் பதிவுசெய்துள்ளனர். அத்துடன், நலன்புரி முகாம்களில் சரணடைந்தவர்களை பஸ்களில் மாற்றும்போதுகூட, முழுமையான விபரங்கள் பதியப்பட்டன.

இவ்வாறு விபரங்கள் பதியப்பட்டவர்கள்தான் காணாமல் போயுள்ளார்கள் என்று உறவினர்களால் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தமிழ் மக்கள், அரசாங்கத்தின் மீதும் உள்ளக விசாரணைப் பொறிமுறை மீதும் நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதை அவர்களினால் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. எனவே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 44ஆவது கூட்டத்தொடர் நடைபெறுவதற்கு முன்பதாக, காணாமல்போனவர்களுக்கு நீதி கிட்டுவதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவவேண்டுமென்பது உறவினர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. இவர்களின் போராட்டங்கள் தொடர்கதையாகாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு இனிவரும் காலங்களிலாவது சர்வதேசம் நீதியைப் பெற்றுக்கொடுத்து இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்பதற்கு காலம்தான் பதில் கூறவேண்டும்.

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



*உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகள் தீவிரமாக நடப்பதால், அந்த சம்பவ காலத்தில் பாதுகாப்புத்துறைக்குப் பொறுப்பாக இருந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் கதிகலங்கிப்போயிருப்பதாக முக்கியமான ஒருவர் நேற்றுக் காலை பேசும்போது சொன்னார்.*

*நினைத்துப் பார்க்கவே முடியாத பலர் சிறைவாசம் அனுபவிக்கவேண்டி வருமென சொல்லப்படுகிறது. அது சரி, விதைத்ததைத்தானே அறுவடை செய்யமுடியும்... தெரிந்து தெரிந்தும் கோட்டை விட்டிருப்பதால் தண்டனை கிடைக்கத்தான் வேண்டும்...!*

- சிவா -
siva@liberty.lk

# தாக்குதல்களை தடுக்க முடியாதவர்கள் தற்போது முதலைக்கண்ணீர் வடிக்கிறார்கள்; அவர்களின் சீருடைகளை களையவேண்டும்

## மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்து



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களை தடுப்பது தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய ஒருசில தரப்பினர் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் முதலைக்கண்ணீர் வடிப்பதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பொறுப்பில்லாமல் செயற்பட்ட அவ்வாறான அதிகாரிகளை பதவிகளிலிருந்து நீக்கவேண்டு மென்றும் அதேபோன்று, வாக்குறுதிகளுக்கமைவாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் இருக்கும் உண்மையான சூத்திரதாரிகளைத் தேடி, அவர்களுக்கு உடனடியாக தண்டனை வழங்குமாறு தற்போதைய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ராகம, தேவத்த பெசிலிகா தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் கூறியுள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் குற்றவாளிகள் யார் என்பதை நாங்கள் இன்னும் கண் திறந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். தமது பொறுப்பை நிறைவேற்றாத அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் யார் என்பது தொடர்பில் தேடிப்பார்ப்பதே தற்போதைய விசாரணைகளில் கண்டறியப்பட்டுவருகிறது,

ஆயினும் இந்தத் தாக்குதல்களை முன்னெடுத்தவர்கள், இதற்கு நிதியுதவி வழங்கியவர்கள், இந்த சம்பவங்களின் பின்னணியில் செயற்பட்டவர்கள் யார் என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. இந்தச் சம்பவங்களின் பின்னணியில் இருப்பவர்களை தேடிச்செல்வது சிறப்பானது என்று நான் எதிர்பார்க்கிறேன். அதேபோன்று சம்பந்தப்பட்டவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று அரசாங்கம் வழங்கிய வாக்குறியும் நிறைவேற்றப்படும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய, இதேபோன்ற செயற்பாடுகளுக்கு இரகசிய சூழ்ச்சி செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கிறேன்.

அவ்வாறில்லாமல் அரசாங்கம் குற்றவாளிகளை மறைத்து அவர்களை தப்பிக்கவைக்க முயற்சிக்குமாக இருந்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம். கடந்த அரசாங்கம் இதுதொடர்பில் முழுமையாக விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. விடயங்களை அறிந்திருந்த போதிலும் அதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வளவு தகவல்களை அறிந்துகொண்டிருந்து ஜனாதிபதி விசாரணைக்குழுவின் முன்னிலையில் வடிப்பதால் எந்தப் பயனும் இல்லை. அவை முதலைக்கண்ணீர். அப்போது, வழங்கப்பட்டிருந்த பொறுப்பை சரியாக நிறைவேற்றாதவர்களுக்கு சரியான தண்டனை வழங்குவதுடன், அவர்களுடைய சீருடைகளை களையவேண்டும்
- என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# கலைக்களஞ்சியம், அகராதி பராமரிப்பிற்கு நிரந்தர அலுவலகம் உடனடியாக வழங்குமாறு பிரதமர் அறிவுறுத்து



கலைக்களஞ்சியம் மற்றும் அகராதியை பராமரிக்க தேவையான வசதிகளுடன் கூடிய நிரந்தர அலுவலக கட்டிடம் உடனடியாக வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கலாசார அலுவல்கள் அமைச்சால் செயற்படுத்தப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று கலந்துரையாடப்பட்டது. இதன்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

கலைக்களஞ்சியத்தையும் அகராதியையும் பராமரிக்க அலுவலக வசதிகளுடன் கூடிய கட்டிடம் இல்லை என்று அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன முன்வைத்த திட்டங்களை பரிசீலித்த பின்னர், பிரதமர் உடனடியாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீரவை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அது குறித்து நடவடிக்கை எடுத்தார்.

இதன்போது, பிரதமர் ஜோன் டி சில்வா நினைவு அரங்கம் மற்றும் கலைக்கூடம் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் ஆராய்ந்த பிரதமர், 1,600 மில்லியன் ரூபா செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள ஜோன் டி சில்வா நினைவு அரங்கின் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணிகளுக்கு இலங்கை கடற்படை அல்லது இராணுவத்தை ஈடுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர். கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்படும் 2020 தேசிய கலை இலக்கிய விழா குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் நொவம்பர் மாதம் சிலாபம் ஆனந்த மத்திய கல்லூரியை மையமாகக்கொண்டு தேசிய கலைவிழா நடைபெறவுள்ளதுடன், தேசநேத்ரு விருதுகள் மற்றும் மாவட்ட கலைஞர் விருதுகள் குறித்து அமைச்சின் அதிகாரிகளால் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஒரு மாவட்டத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள கலைஞர் விருதுகள் அடுத்த வருடம் முதல் நாடு முழுவதுமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படவேண்டும். நாடு முழுவதும் புதிதாக கட்டப்படும் 19 கலாசார மையங்கள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் திறக்கப்படவேண்டும் என்றும், தேவையான பணியாளர்களை பொது நிர்வாக அமைச்சுடன் கலந்தாலோசித்து பெற்றுக் கொள்ளுமாறும் பிரதமர் தெரிவித்தார்.

# சிறைகளிலுள்ள 46 தாய்மார்களின் விபர அறிக்கையை பிரதமரிடம் கையளிக்க தீர்மானம்

சிறுபிள்ளைகளுடன் விளக்கமறியல் மற்றும் சிறைச்சாலைகளிலுள்ள 46 தாய்மார்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்த வாரம் கையளிக்கப்படவுள்ளது.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தமது சிறு பிள்ளைகளுடன் சிறைச்சாலைகளிலுள்ள பெண்களில் ஐவர் சிறைத்தண்டனைக்கு உட்பட்டவர்கள் என்றும் ஏனையோர் விளக்கமறியலில் உள்ளவர்கள் என்றும் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள 5 பேரில் 2 பேரை பொதுமன்னிப்பின்கீழ் விடுதலைசெய்வதற்கும், விளக்கமறியலில் உள்ளோரை விரைவாக பிணையில் விடுதலை செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

3இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட வயதுடைய பிள்ளைகளின் தாய்மார்கள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு சிறைச்சாலைகளில் அடைக்கப் படுவதற்கமைவாக சம்பந்தப்பட்ட தாய்மார்களின் பிள்ளைகளை பாதுகாப்பாக அவர்களது நெருக்கமான உறவினர்களிடம் ஒப்படைப்பது பொருத்தமானது என்பதால் அதற்கான சட்ட வரைபை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் ஆஜராகுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 3ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராக அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரியில் உயர் அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுக்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார். கடந்த ஆட்சியின்போது அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுகள் மற்றும் நீதித்துறை மற்றும் பொலிஸ் மீது தலையீடு குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் ஆவா குழுவையே அடக்கிவிட்டோம் தமிழர்களுக்கு இனியென்ன பிரச்சினை?

## விமல் வில்லங்க கேள்வி!



வடக்கில் கடந்த ஆட்சிக்காலத்தில் கொட்டமடித்த ஆவா குழுவை அடக்கி விட்டோம் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் விமல் வீரவங்ச, மக்கள் வழங்கியுள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையை சரியாகப் பயன்படுத்தி நாட்டை ஒரே சட்டத்தின் கீழ் கொண்டுவரும் ஓர் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிலியந்தலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் கூட, எங்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்தது, ஏனெனில், இந்த நாட்டின் மக்கள் ஸ்திரத்தன்மையை கோருகிறார்கள். கடந்த நான்கரை ஆண்டுகளில், இந்த நாட்டு மக்கள் குழப்பமான ஆட்சியை அனுபவித்திருக்கிறார்கள். இதுபோன்ற குழப்பத்தை மீண்டும் அனுபவிக்கக் கூடாது என மக்கள் பெரும்பான்மையை வழங்கியுள்ளார்கள். மக்கள் அந்த பெரும்பான்மையை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மிகுந்த நம்பிக்கையுடன் வழங்கியுள்ளனர்.

அந்த நம்பிக்கையில்தான் ஒரு புதிய அரசியலமைப்பு அல்லது ஒரே சட்டம் அறிமுகப்படுத்தப்படும். புதிய அரசியலமைப்பு ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தனித்தனி சட்டங்கள் இருப்பதை நிறுத்தி முழு நாட்டையும் ஒரே சட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். அத்தகைய அரசியலமைப்புத் திருத்தத்தின் ஆரம்ப வரைபு அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். 19ஆவது திருத்தத்தால் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட குழப்பம் நமது அரசுக்கு பொருந்தாது.

அந்தக் குழப்பம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கும் பொருந்தாது. அந்த சக்திகள் ஒருவருக்கொருவர் மோதப்போவதில்லை. எனவே, இன்று 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய்வதற்குப் பதிலாக நாட்டை உறுதிப்படுத்தும் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதன் அவசியத்தை நான் அறிந்து வைத்துள்ளேன். அமெரிக்கத் தூதரை சந்தித்த சம்பந்தன், சிறுபான்மையினரை காப்பாற்றும்படி கோரியிருக்கிறார். அவர்கள் இந்த ஆட்சியில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். கடந்த நான்கரை வருடங்களில் வடக்கில் ஆவா குழு அட்டகாசம் செய்தது. இப்பொழுது அவர்களை அடக்கி விட்டோம் - என்றார்.



கோனஹேன விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாக்கேவிட, வெலிக்கடை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது, 33 லீற்றர் 750 மில்லிலீற்றர் சட்டவிரோத போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## செய்தித் துளிகள்

கைதுசெய்யப்பட்ட நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோ உள்ளிட்ட நால்வருக்கும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

★★★★★★★★

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவின் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த மூவரும் அவர்களுக்கு உதவிசெய்த இலங்கையர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

★★★★★★★★

முகக்கவசத்திற்குள் சூட்சுமான முறையில் 7 ஹெரோயின் பைக்கற்றுகளை எடுத்துச்சென்ற நபரொருவர் கணேமுல்ல, கலஹிட்டியாவ பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★★★★

தெஹிவளை ரயில் வீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியான 40 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

★★★★★★★★

நச்சுப்போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 1997 என்ற தொலைபேசி இலக்கம் செயற்படுவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

★★★★★★★★

பேலியகொட மெனிங் சந்தைக் கட்டடத் தொகுதி நொவம்பர் மாதத்தில் பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப்படவுள்ளது.

# இலங்கை நூலகச் சங்கத்தின் 60 ஆவது வருடாந்த கூட்டம் இம்மாதம்



இலங்கை நூலகச் சங்கமானது நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான உயர் டிப்ளோமா பாடநெறியை இலங்கையில் 6 கற்கை நிலையங்களில் நடத்திவருகின்றது. இந்த உயர் டிப்ளோமா பாடநெறியின் ஆரம்ப விருது வழங்கும் நிகழ்வானது அன்மையில் இலங்கை மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே கலந்து சிறப்பித்தார். பிரதம அதிதியுடன் இலங்கை நூலக சங்கத்தின் தலைவர் கலாநிதி நயனா விஜயசுந்தரவும் கல்வி உத்தியோகத்தர் கலாநிதி சம்பா அழகக்கோனும் இணைந்து மாணவர்களுக்கான விருதுகளை வழங்கினர். இலங்கை நூலக சங்கத்தின் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் தலைவர்கள், கற்கை நிலைய ஒருங்கிணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சுமார் நூறு மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் இந்நிகழ்வின்போது வழங்கப்பட்டன. அத்துடன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நூலகர் காலஞ்சென்ற ஸ்ரீகாந்த லட்சுமி அருளானந்தத்தின் நினைவாக உயர் டிப்ளோமா பாடநெறியில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு ஸ்ரீகாந்த லட்சுமி அருளானந்தம் நினைவு விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதனைத் தவிர, எஸ்.சி. பிளாக் ஞாபகார்த்த புலமைப்பரிசிலும் இறுதிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கான தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டன.

மேலும், இவ்வருடம் இலங்கை நூலகச் சங்கம் உருவாக்கப்பட்டு 60ஆவது ஆண்டை பூர்த்திசெய்யும் முகமாக இப் பட்டமளிப்பு விழா ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி இலங்கை நூலகத்தின் 60ஆவது வருடாந்தக் கூட்டம் நடைபெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொலிஸார் விடுத்துள்ள அறிவிப்பு சுவரொட்டிகள்

கொவிட் - 19 தொற்றுள்ள நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக அனுமதியின்றி எமது நாட்டுக்குள் நபர்கள் உட்பிரவேசித்தலை தடுப்பதற்காக உதவுமாறு பொலிஸாரால் வவுனியாவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

காய்ச்சல், வறட்டு இருமல், சளி, மூச்சுத் திணறல் இருக்கும் நபர்கள் கொரோனா தொற்றாக இருக்கலாம்.

எனவே, அவர்களிடமிருந்து அவதானமாக இருங்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான நபர்களை தங்கவைத்தல், பாதுகாப்பளித்தல், போக்குவரத்துக்காக உதவியளித்தல், மறைத்திருப்பதற்காக உதவிபுரிதல் செய்யலாகாது. எனவே, மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக தகவல் கிடைத்தால், அறிய கிடைத்தால், இல்லாவிடில் காணக்கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

199 அல்லது 1933 அல்லது 011 2444480 அல்லது 011 2444481 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துமாறும் அல்லது 071-8558875 என்ற வட்சப் இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொள்ளுமாறு பொலிஸாரால் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகள் வவுனியா நகர், புதிய பஸ் நிலையம் போன்ற இடங்களில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

# வவுனியா நகர் முழுவதும் பொலிஸார் சோதனை நடவடிக்கை

வவுனியா நகர் முழுவதும் மோப்பநாயின் உதவியுடன் வவுனியா பொலிஸார் நேற்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

'போதைப்பொருளற்ற வவுனியாவை உருவாக்குவோம்' எனும் எண்ணக்கருவில் வவுனியா பொலிஸாரால் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சிறைச்சாலை சுற்றுவட்டச் சூழல், வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள், பொது மலசலகூடங்கள், சந்தைகள், களஞ்சியசாலைகள் போன்றவற்றில் மோப்பநாயின் உதவியுடன் சோதனை நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த நடவடிக்கையில் 20இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன், சந்தேகத்துக்கிடமான நபர்கள் மற்றும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் விபரங்களையும் பொலிஸார் சேகரித்தனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஒத்துழைப்புகளை வழங்கியிருந்ததுடன், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்கும் வவுனியா பொலிஸாரின் நடவடிக்கைக்கு பாராட்டுகளையும் தெரிவித்திருந்தனர்.

# இரண்டு மாகாண ஆளுநர்கள் இடமாற்றம்

வடமேல் மாகாண ஆளுநராக ஏ.ஜே.எம்.முஸம்மில் ஊவா மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக ராஜகொல்லுரே நியமிக்கப்பட்டுள்ளார்.

# மலையக மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்புரிமை உட்பட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்பட்டார் அனுஷா

## கட்சியின் தேசிய சபை ஏகமனதாக முடிவு

(ஹட்டன்)

மலையக மக்கள் முன்னணியின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்தும் பிரதி பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் அனுஷா சந்திரசேகரன் வெளியேற்றப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று ஹட்டன் மலையக மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபை கூட்டம் நடைபெற்றது. இதன்பின் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்படுத்தி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ், நிதிச் செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரன் கட்சியின் உயர்மட்ட அங்கத்தவர்களும் தேசிய சபை பொதுச் சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



கட்சியின் உயர்பீடம் தேசிய சபை, பொதுச் சபை ஆகியவற்றில் அங்கம் வகிக்கின்ற 245 அங்கத்தவர்களில் 204 பேர் கலந்துகொண்டனர். இவர்கள் அனைவரும் கீழ்கண்ட தீர்மானங்களுக்கு ஏகமனதாக தங்களுடைய சம்மதத்தை வழங்கினர்.

1. அனுஷா சந்திரசேகரன் கட்சியின் யாப்புக்கு முரணாக செயற்பட்டதன் காரணமாக அவரை அனைத்து பதவிகளிலிருந்தும் வெளியேற்றுவது எனவும் எதிர்வரும் காலத்தில் அனுஷா சந்திரசேகரன் மலையக மக்கள் முன்னணியின் கொடியையோ கட்சியின் நிறத்தையோ அல்லது அவர் ஏற்கனவே வகித்த பிரதி பொதுச் செயலாளர் நாயகம் என்ற பதவியையோ எந்தச் சந்தர்ப்பத்திலும் பாவிக்க முடியாது.

2. ம.ம.முன்னணியின் ஒரு அங்கமாக ஆசிரியர் முன்னணியின் செயலாளராக செயற்பட்ட எஸ்.ரவீந்திரனை கட்சியின் அனைத்துப் பதவிகளிலிருந்தும் வெளியேற்றுவதாகவும் மிக விரைவில் புதிய ஆசிரியர் முன்னணி உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

3. மலையக மக்கள் முன்னணியின் ஓர் அங்கமாக தோட்ட சேவையாளர்களை உள்வாங்கி அவர்களுக்காக ஓர் அமைப்பை ஏற்படுத்தல்.

4. மலையக மக்கள் முன்னணியின் நிதிச் செயலாளராக செயற்பட்ட பேராசிரியர் விஜய சந்திரன் பிரதி பொதுச் செயலாளராக ஏகமனதாக நியமிக்கப்பட்டது.

5. கட்சிக்கான 25 பேர் கொண்ட புதிய நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தல் ஆகிய விடயங்களுக்கே நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## மலையக மக்கள் முன்னணியின் யாப்பை நான் மீறவில்லை:

### தேசிய சபையின் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டவுடன் சட்டரீதியான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் – அனுஷா தெரிவிப்பு

(தலவாக்கலை)

மலையக மக்கள் முன்னணியின் யாப்பை நான் மீறவில்லை. தேசிய சபையின் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்று மலையக மக்கள் முன்னணியின் பிரதி பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.



மலையக மக்கள் முன்னணியின் உயர்பீடம் அனுஷா சந்திரசேகரனை கட்சியிலிருந்து வெளியேற்றியமை தொடர்பில் நேற்று மாலை தலவாக்கலையில் வைத்து ஊடகங்களுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மலையக மக்கள் முன்னணியின் தேசிய சபையால் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தீர்மானம் தொடர்பில் எனக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. நானும் தேசிய சபையில் அங்கம் வகிக்கின்றேன், கூட்டம் தொடர்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனது தந்தையின் ஆதரவாளர்களும் தேசிய சபையில் இருக்கின்றனர். அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. தலைமையின் முடிவுக்கு கட்டுப்படுபவர்களுக்கு அழைப்பு விடுத்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தனித்துவ அடையாளத்தை நிரூபிக்கும் நோக்கிலேயே பொதுத் தேர்தலில் சுயேச்சையாக களமிறங்கினேன். அதனை செய்தும் காட்டினேன். மக்களும் ஆதரவு வழங்கினார்கள்.

மக்கள் என்பதே மலையக மக்கள் முன்னணி, என்னை கட்சியைவிட்டு வெளியேற்ற சாதாரணதொரு குழுவால் தீர்மானிக்கமுடியாது. மக்கள் எனது பக்கமே இருக்கின்றனர், அவ்வாறு இல்லாவிட்டால் எனக்கு 17 ஆயிரத்து 107 வாக்குகள் கிடைத்திருக்காது.

மலையக மக்கள் முன்னணியின் நிதி அறிக்கை எங்கே? தலைவர்களுக்கு கொடுக்கவேண்டிய கோட்டா பணம் வழங்கப்பட்டதா, அமைப்பாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டதா, ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டதா, அவற்றை சுட்டிக்காட்டினால் பழிவாங்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கட்சி எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் எனக்கு இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அறிவிக்கப்பட்டதும் எனது சிரேஷ்ட சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்வேன். அது மக்கள் தொடர்பாகவும், சட்டரீதியாகவும் இருக்கும்.

தேர்தலில் மலையக மக்கள் முன்னணி மண்வெட்டி சின்னத்தில் களமிறங்கியிருந்தால், நான் சுயேச்சையாக போட்டியிட்டிருந்தால்தான் கட்சி யாப்பை மீறுவதாக அமையும். எனவே, நான் யாப்பை மீறவில்லை.




## சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(நோட்டன் பிரிட்ஜ்)

சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரை கைதுசெய்துள்ளதுடன் மாணிக்ககல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொகவந்தலாவை பொலிஸார் மீட்டுள்ளனர்.



பொகவந்தலாவை கெம்பியன் தோட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் வழக்கு பதிவுசெய்து ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

## கொட்டகலை வெலிங்டன் பகுதியில் குளவித் தாக்குதல்

(நோட்டன் பிரிட்ஜ்)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை யுனிபீல்ட் வெலிங்டன் பிரிவில் வேலைக்குச் சென்ற தொழிலாளர்கள் குளவித் தாக்குதலுக்கு இலக்காகினர்.



நேற்றுக்காலை இடம்பெற்ற இக் குளவித் தாக்குதலுக்கு இலக்கான தொழிலாளர்கள் இருவர் கொட்டகலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், தோட்டத் தொழில்துறை, சிறுவர் முன்பள்ளியின் கற்பித்தல் நடவடிக்கையும் நிறுத்தப்பட்டுள்ளது,

வேலைக்கு சென்றுகொண்டிருந்தவர்கள் உட்பட அவ்வழியில் வாகனங்களில் பயணித்தவர்கள் மீதும் குளவி கொட்டியுள்ளது. மரத்திலிருந்த குளவிக்கூடு திடீரென கலைந்து கொட்டியமையால் பீதியடைந்த தோட்ட மக்கள் தொழிலுக்குச் செல்லாது தோட்டத்தின் சகல பகுதிகளிலும் தீ மூட்டி குளவிகளை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# கூரைக்கு பதிலாக கொங்க்றீட் இட்ட தனி வீடுகளையே அமைக்கவுள்ளோம்
# போலிக் கதைகளை நம்பவேண்டாம்: ஜீவன் தெரிவிப்பு

(தலவாக்கலை)

"மாடிவீடு என்ற போலி கதைகளை நம்பவேண்டாம். தனி வீடுகளையே நாம் அமைப்போம்" - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது நம்பொடை சௌமியமூர்த்தி தொண்டமான் கலாசார நிலையத்தின் அழகியற் கல்லூரி மாணவர்களால் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:

ஒவ்வொரு வருடமும் இந்த நாளில் ஐயாவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை









செலுத்துவதற்கு இவ்விடத்துக்கு வருவோம். அன்று எனது தந்தை எம்மை அழைத்துவந்தார். இன்று அவர் இல்லை. அது பெரும் துயரை தருகின்றது. இருந்தாலும் நல்லுள்ளங்களை தேடிவைத்துவிட்டே எனது தந்தை சென்றுள்ளார். அவர்கள் இன்று என்னை அரவணைக்கின்றனர்.

மலையகத்துக்கான வீட்டுத்திட்டம் தொடர்பில் பிரதமருடன் அண்மையில் கலந்துரையாடல் நடத்தினோம். எனினும், மாடி வீடு, மாடி வீடு என அது தொடர்பில் தவறான கருத்து பரப்பப்பட்டுவருகின்றது. கூரைக்குப் பதிலாக கொங்க்றீட் போட்ட தனி வீடுகளையே நாம் அமைக்கவுள்ளோம். எனவே, போலித்தகவல்களை நம்பவேண்டாம். விரைவில் உண்மை என்னவென்பதை உங்களால் நேரில் காணமுடியும்.

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மண்டபத்தின்கீழ் நான்கு நிறுவனங்கள் வருகின்றன. அவை தொடர்பிலும் கலந்துரையாடினோம். மேற்படி நிறுவனங்களில் வளப்பற்றாக்குறை இருந்தன. அவை குறித்து சுட்டிக்காட்டினோம்.

அதேவேளை, கலைஞர்களை நாம் ஊக்குவிக்கவேண்டும் என்பதுடன் அவர்களுக்கான களத்தை அமைத்துக்கொடுத்து உரிய அங்கீகாரம் வழங்கவேண்டும். கலைஞர்கள் வாழ்ந்தால் மட்டுமே கலைகள் வாழும். அவ்வாறில்லாவிட்டால் கலைகள் அழிந்துவிடும். எனவே, கலைஞர்களுக்கு அங்கீகாரம் வழங்காமல் கலைகளை பாதுகாக்கமுடியாது. அதனை நாம் நிச்சயம் செய்வோம்.

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின்கீழ் இயங்கும் தொண்டமான் கலாசார நிலையத்தில் 9ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## மலையக தபால் சேவை அசௌகரியங்களை விரைவில் போக்க வியாழேந்திரன் நடவடிக்கை

மலையக மக்கள் கடிதங்கள் மற்றும் அவசர தபால் சார்ந்த கடிதங்களை பெற்றுக்கொள்ளவதில் எதிர்நோக்கும் அசௌகரியங்களைப் போக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகத்துறை தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் நேற்று நடைபெற்ற தபால் திணைக்களத்தின் விசேட நிகழ்வில் சிறப்புரையாற்றிய இராஜாங்க அமைச்சர் இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் முன்னாள் மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானுடன் இணைந்து இதற்கு தீர்வுகாணப்படும் என்று தெரிவித்தார்.

இன, மத வேறுபாடுகளின்றி சுமார் 50 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு



வேலைவாய்ப்பை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இதேபோன்று இன்னும் சில தினங்களில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடையாத ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## வனவிலங்குகளை வேட்டையாடுபவர்களுக்கு எதிராக அதிகபட்ச தண்டனை வழங்க நடவடிக்கை

(மஸ்கெலியா)

மத்திய மாகாண வனத்துறை பகுதிகளில் கடந்த 8 மாத காலத்தில் மாத்திரம் 6 புலிகள் இறந்துள்ளன - என மத்திய மலைநாட்டுப் பகுதியின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை அதிகாரி தெரிவித்தார்.

காட்டு மிருகங்களை வேட்டையாடும் வகையில் போடப்படும் வலைகளில் சிக்கியே இப்புலிகள் உயிரிழந்துள்ளதாக மத்திய மலைநாட்டுப் பகுதியின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை அதிகாரி தெரிவித்தார். நாவலப்பிட்டி, கம்பளை, புசல்லாவ, மஸ்கெலியா மற்றும் நல்லதண்ணி பிரதேசங்களிலேயே இவ்வாறு வலையில் சிக்கி புலிகள் இறந்துள்ளதாக பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

2020 ஜனவரி முதல் ஒகஸ்ட் மாத காலப்பகுதியில் வலையில் சிக்கிய 5 புலிகள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு காப்பாற்றப்பட்ட புலிகள் கம்பளை, புசல்லாவை பகுதியில் வலையில் சிக்கியிருந்ததுடன், மிகவும் நிதானமான முறையில் செயற்பட்டு புலிகளின் உயிரை காப்பாற்றியதாகவும் தெரியவருகின்றது.

இறந்த 6 புலிகளில் மிகவும் அரிதாக உள்ள கரும்புலி வலையில் சிக்குண்டு அதனை நீண்டநேர போராட்டத்தின் மத்தியில் காப்பாற்றப்பட்டது. பின்னர் அந்த கரும்புலியை உடவலவ வன வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியம் செய்து 2 நாட்களுக்கு பின்னர் சிகிச்சைபலனின்றி இறந்தமை குறிப்பிடத்தக்கது.

வனவிலங்குகளை வலையிட்டு வேட்டையாடுவோரை சட்டத்தின்முன் நிறுத்தி அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என வனஜீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரட்னாயக்கவிடம் கோரியுள்ளதாகவும் அதற்கான அமைச்சரவை அனுமதிப்பத்திரம் பெற அமைச்சர் முன்வந்துள்ளதாகவும் வனத்துறை அதிகாரி பிரகாஸ் கருணாதிலக்க கூறினார்.

## அகலவத்தை – டார்டன்பீல்ட் கணபதி அறநெறிப் பாடசாலையின் இறுவட்டு வெளியீட்டுவிழா

(களுத்துறை)

அகலவத்தை டார்டன்பீல்ட் தோட்ட கணபதி அறநெறிப் பாடசாலையின் பாடசாலை கீத இறுவட்டு வெளியீட்டு விழா அதன் பொறுப்பாளர் சதாசிவம் உதயசாந்தனின் தலைமையில் நேற்று முன்தினம் தோட்ட முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.



இதன்போது களுத்துறை மாவட்டத்தில் இயங்கும் பல்வேறு அறநெறிப் பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்களது இந்து பாரம்பரியங்களை பறைசாற்றும் வகையிலான கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மேலும், களுத்துறை மாவட்டத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக அறநெறிப் பாடசாலைகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்கள் மற்றும் பிரதேச தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு வகைகளிலும் அயராது பணியாற்றிவரும் தன்னார்வலர்கள், நலன்விரும்பிகள், எழுத்தாளர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு பொய்யான முறைப்பாடுகளை பதிவுசெய்த நபர் கைது

(ஹட்டன்)

119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை மேற்கொண்டு பொய்யான முறைப்பாடுகளை பதிவுசெய்த நபரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நோர்வூட் சென். ஜோன்டிலரி மேற்பிரிவு தோட்ட பகுதியிலுள்ள நபரொருவர் தொடர்ச்சியாக 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை மேற்கொண்டு பொய்யான முறைப்பாடுகளை பதிவுசெய்து வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் (30) கைதுசெய்துள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் தொடர்சியாக 119 என்ற அவசர இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பொய்யான முறைபாடுகளை பதிவுசெய்து வந்தமை தொடர்பில் அழைப்பினை பெற்று, இலக்கத்தின் உரிமையாளரை இனங்கண்டு கொள்வதற்காக நோர்வூட் பொலிஸார், ஹட்டன் நீதிமன்றத்தில் பீ அறிக்கையினை சமர்ப்பித்து, அதன் ஊடாக அனுமதியினை பெற்று குறித்த தொலைபேசி இலக்கத்தின் உரிமையாளரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கைத்தொலைபேசியையும் பொலிஸார் மீட்டுள்ளனர். மேலும் சந்தேகநபரை ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதோடு, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எட்டுப் பேரை கட்சியிலிருந்து நீக்குங்கள்!

## - தமிழ் அரசுக் கட்சியிடம் கோரினார் சுமந்திரன் -



**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றபோது கட்சி செயலாளருக்கு சுமந்திரன் கடிதமொன்றை வழங்கியிருந்தார். அந்தக் கடிதத்தின் விபரம் இதோ -**

**கி. துரைராஜசிங்கம்**
**பொதுச் செயலாளர்**
**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**
**ஐயா,**
**பொதுத் தேர்தல் 2020,**

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2020இல் நாம் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கிறோம். அதாவது, எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 16 ஆசனங்களிலிருந்து 10 ஆசனங்களுக்கு குறைக்கப்பட்டபோது தோல்வியடைந்த வேட்பாளர்களுள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், பொதுச் செயலாளரும் அடங்குகின்றனர். இப்படியாக கட்சியின் தலைவரும் பொதுச் செயலாளரும் பின்னடைவை சந்தித்தமையானது கட்சி தோல்வியடைந்ததாகக்

> **“நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்த காலத்தில் கூட - தேர்தல் காலத்திலே - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றைய சில வேட்பாளர்களும் எனக்கு எதிராகப் பகிரங்கமாக பல அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்கள்.”**

கருதப்படக்கூடியதொரு துர்ப்பாக்கிய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இத்தோல்விக்கான காரணங்கள் பல. அவற்றில் சில வெளிக்காரணிகள். அவற்றை ஆராய்வதற்கு முன்னதாக உள்காரணிகளை நாங்கள் அடையாளம் காணவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் காணப்பட்ட உள்ளக முரண்பாடுகளும் எமது கட்சி வேட்பாளர்களே சகவேட்பாளர்களுக்கு எதிராக – விசேடமாக எனக்கெதிராக – வெளிப்படையாகச் செய்த பிரசாரமும் இப் பின்னடைவிற்கு முக்கிய காரணிகள் என்பது எனது நிலைப்பாடு.

இந்தச் செயல்களிலே ஈடுபட்ட கட்சி உறுப்பினர்கள் உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டும். ஏனென்றால், முக்கியமான தேர்தலொன்றில் தமது சொந்தக் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராக அதே கட்சி உறுப்பினர்களே பிரசாரம் செய்வதை எக்காலத்திலும் தேர்தல் அரசியலில் ஈடுபடுகின்ற ஒரு அரசியல் கட்சி அனுமதிக்க முடியாது.

கடந்த ஓகஸ்ட் 2015 பொதுத் தேர்தலில் சி.வி.விக்கினேஸ்வரன் எமது கட்சிக்கெதிராக எடுத்த நிலைப்பாடு காரணமாக அவரை உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்க வேண்டுமென்று எமது மத்திய செயற்குழுவில் நான் கோரிக்கை விடுத்தது அனைவருக்கும் ஞாபகமிருக்கும். அதை அப்பொழுதே செய்யாததன் விளைவு இன்றுவரை கட்சியை மிக மோசமாகப் பாதித்திருக்கிறது. அந்தத் தவறை மீண்டும் மீண்டும் இழைக்கக்கூடாதென்பதே எனது நிலைப்பாடு.

இவ்வருட ஆரம்பத்தில் எமது அரசியல் குழு திருகோணமலையில் கூடி எதிர்கொள்ளவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்-2020ஐக் குறித்து ஆராய்ந்தபோது ஏகமனதாக முக்கியமான முடிவொன்றை எடுத்து பகிரங்கமாக அறிவித்திருந்தோம். சம்பந்தன் பத்திரிகைகளுக்குச் சொன்னதன் பிரகாரம், ‘இந்தத் தடவை நாங்கள் வேட்பாளர்களாக படித்த, ஆற்றலுள்ள இளைஞர்களுக்கே முன்னுரிமை கொடுப்போம்’ என்பதே அந்த முடிவு.

இதை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள் என்ற காரணத்துக்காக இயல்பாகவே வேட்பாளர் நியமனம் கொடுக்கக்கப்படக்கூடாதென்றும், நாங்களும் மற்றவர்களுடன் சேர்ந்து விண்ணப்பித்து பொருத்தமானவர்களுக்கு நியமனம் கொடுக்கப்படவேண்டுமென்றும் பல தடவைகளில் நான் வலியுறுத்தியிருந்தேன். இதற்கமைவாக கட்சியால் புதிதாக விண்ணப்பங்கள் கோரப்படவேண்டிய தேவைப்பாடு இருந்தபோதிலும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்பதுடன், ஒரேயொரு தடவைதான் வேட்பாளர் நியமனக் குழு கூடியது. அங்கும் இதே கருத்தை நான் ஆணித்தரமாக முன்வைத்திருந்தேன். ஆனால், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன் விளைவை இந்தத் தேர்தல் முடிவுகளில் அப்பட்டமாகக் காணலாம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் தோல்வியடைந்திருக்கிறார்கள். நால்வரே வெற்றிபெற்றிருக்கிறோம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனுக்கு நியமனம் கொடுக்கக்கூடாதென்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவருக்கு தனியாகக் கூறியிருந்தேன். திரும்பவும் ஒரு தடவை கட்சி அலுவலகத்தில் வைத்து இதே கருத்தை அவருக்குக் கூறியிருந்தேன். குறித்த விடயம் இணையதளங்களில் வெளியாகி பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் நியமனக் குழுக் கூட்டத்தில் சரவணபவனின் முன்னிலையிலும் குறிப்பிட்ட விடயத்தைக் கூறியிருந்தேன். அதற்கான நியாயமான காரணங்கள் பல இருந்தன. அப்படியிருந்தும் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டது. ஆனால், மக்கள் அவரைத் தேர்தலில் தோற்கடித்திருக்கிறார்கள். அவர் தோல்வியடைந்ததற்கு மேலாக கட்சியின் தோல்விக்கு அவருடைய செயற்பாடுகள் மிகவும் முக்கிய காரணியாக அமைந்திருந்தன.

அதேபோல் குறிப்பிட்ட ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரால் புரியப்பட்டதாக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் கிடைக்கப்பெற்ற திடமான சில ஆதாரங்களை கட்சித் தலைமைக்குச் சேர்ப்பித்திருந்தபோதிலும் அதுதொடர்பில் எதுவித விசாரணைகளுமின்றி குறிப்பிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அவரும் இத்தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்த காலத்தில் கூட - தேர்தல் காலத்திலே - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றைய சில வேட்பாளர்களும் எனக்கு எதிராகப் பகிரங்கமாக பல அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்கள்.

நான் மே மாதத்தில் ஊடகமொன்றுக்கு சிங்கள மொழியில் கொடுத்த பேட்டியை அரசாங்கக் கட்சியின் ஊடகமொன்று தேர்தல் உள்நோக்கங்களோடு திரிபுபடுத்தி வெளியிட்ட போது அதைப்பற்றி என்னிடம் தனிப்பட எந்த விளக்கத்தையும் கோராது சரியான மொழிபெயர்ப்பைக்கூட அறியாது தன்னிச்சையாக எமது கட்சியின் பல வேட்பாளர்கள் விருப்பு வாக்கு நோக்கங்களுக்காக எதிர்ப்பு அறிக்கைகளை வெளியிட்டார்கள். அப்படி கண்டன அறிக்கைகள் வெளியிடாதிருந்த சிலரிடம் சரவணபவன் தொடர்ச்சியாகத் தொலைபேசியில் அழைப்பெடுத்து அவர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிடவேண்டுமென வற்புறுத்தியிருந்தார். குறித்த செவ்வியைப் பற்றிய சரியான விளக்கத்தை நான் கொடுத்த பின்பும் கூட மீண்டும் மீண்டும் தேர்தல் காலத்தில் இந்த விடயத்தை பேசுபொருளாக்கி ஊதிப் பெருப்பித்திருந்தார்கள். தேர்தல் பிரசாரக் காலத்தில் நான் பேசிய கூட்டங்களில் இந்த விடயம் குறித்த தெளிவூட்டலை மக்களுக்கு வழங்கியிருந்தேன்.

என்னை இந்த விடயத்தில் கடுமையாக விமர்சித்தவர்கள் இப்போது தோல்வியடைந் திருக்கிறார்கள். நான் வென்றிருக்கிறேன். குறிப்பாக, சரவணபவன் நான் கட்சிப்

> **“என்னை இந்த விடயத்தில் கடுமையாக விமர்சித்தவர்கள் இப்போது தோல்வியடைந் திருக்கிறார்கள். நான் வென்றிருக்கிறேன்.”**

பொறுப்புகளிலிருந்து தூக்கியெறியப்பட வேண்டுமெனக் கூறியிருந்ததோடு, உதயன் பத்திரிகை தொடர்ச்சியாக எனக்கெதிரான பிரசாரத்தை முன்னெடுத்திருந்தது. இச் செவ்வி சம்பந்தமாக சம்பந்தன் வெளியிட்ட அறிக்கையையும் மாற்றி திரிபுபடுத்தி வெளியிட்டிருந்தது. ஒரு முறை பத்திரிகைத் தலைப்பாக ‘தமிழ்த் தேசியத்தைக் காக்க சுமந்திரனைத் தோற்கடிப்போம்’ என்றும் இன்னொரு தடவை முதற் பக்கத்தில் கட்டமிடப்பட்ட செய்தியாக ‘சுமந்திரனுக்கு அமைச்சுப் பதவி ஆசை’ என்றும் பிரசுரித்திருந்தது.

சரவணபவனைப் போலவே வேறு சில வேட்பாளர்களும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் ‘சுமந்திரனுக்கு வாக்களிக்க வேண்டாம், நீங்கள் கட்சிக்கும் மற்றைய வேட்பாளர்களுக்கும் வாக்களியுங்கள்’ என பல சந்தர்ப்பங்களில் கூறியதற்கான ஆதாரங்கள் என்னிடமுள்ளன. இவையெல்லாவற்றையும் நான் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் அவ்வப்போதே தெரியப்படுத்தியிருந்தேன்.

சிவஞானம் சிறீதரன் எனக்கெதிராக அறிக்கை வெளியிடாததன் காரணமாகவும், எனக்கு சார்பாக சில கருத்துகளைச் சொன்னதன் காரணமாகவும் கட்சி முக்கியஸ்தர்களும் வேறு பலரும் அவருக்கு எதிராகவும் பிரசாரம் செய்தார்கள். நாங்கள் இருவரும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே கட்சிக்குள்ளிருந்தும் வெளியேயிருந்தும் யாழ். தேர்தல் மாவட்டத்தில் செய்யப்பட்ட மிகப் பெரும் பிரசாரம். தேர்தலை அண்மித்த நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறும், ஆனால், அதில் எங்கள் இருவரையும் தோற்கடிக்குமாறும் இலட்சக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இறுதியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் சிறீதரனும் நானும் மாத்திரமே வெற்றிபெற்றிருக்கிறோம். எமக்கெதிரான பிரசாரத்தை நடத்தியவர்களும் நடத்த கண்டுகொள்ளாதவர்களும் மக்களால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எமது கட்சி உறுப்பினர்களான க. குணாளன், செல்வராசா பிரதாப் மற்றும் பீற்றர் இளஞ்செழியன் போன்றவர்கள் வெளிப்படையாகவே சிறீதரனுக்கும் எனக்கும் எதிராகப் பிரசாரம் செய்தார்கள். இவர்களைத் தவிர, இங்கு பெயர் குறிப்பிடப்படாத கட்சியின் சிரேஷ்ட நிலையிலுள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் என் கைவசமுள்ளது.

சிறீதரனுக்கு எதிரான குணாளனுடைய செயற்பாடுகள் தேர்தல் காலத்திற்கு முன்னதாகவே இடம்பெற்றுவந்துள்ளது. சிறீதரன் இதைக் குறித்து பல தடவைகள் முறைப்பாடுகளைச் செய்தும் இதுவரை குணாளனுக்கோ, மற்றையவர்களுக்கு எதிராகவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைப் போலவே சரவணபவனுக்கு எதிராக வைத்தியர் சத்தியலிங்கம் சில வருடங்களுக்கு முன்னர் கொடுத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேற்சொன்னவர்களைப் போலவே திரு. கே. வி.தவராசா அவர்களும் தேர்தல் காலத்திலே எனக்கு எதிராக கடும் பிரசாரமொன்றை பகிரங்கமாக மேற்கொண்டிருந்தார். தேசியப் பட்டியலிலே அவருடைய பெயர் முதற் பெயராக எழுதப்படாததை காரணங்காட்டி அவர் சார்பில் குணாளனும் வேறுசிலரும் எனக்கெதிராக தொடர்ச்சியாக பிரசாரம் செய்தார்கள். தவராசா அவர்களும் என்னைப் பற்றிய பல பொய்யான தகவல்களையும் வழங்கி குறைந்தது ஏழு தடவைகளாவது அறிக்கைகளும் செவ்விகளும் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் வேட்பாளர்களும் கூட இப்படியான கருத்துகளை தேர்தல் காலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இதிலே செல்வம் அடைக்கலநாதன் முதன்மையானவர். யாழ்பாண தேர்தல் மாவட்டத்து வேட்பாளர்கள் சித்தார்த்தனும் கஜதீபனும் சேர்ந்து வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களில் என்னையும் சிறிதரனையும் குறிவைத்துத் தாக்கியிருந்தனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபனும் திருமதி மிதிலைச் செல்வி ஸ்ரீபத்மநாதனும் நியமனப்பத்திரம் பூர்த்திசெய்த நாளிலிருந்து கட்சிக்கெதிராக ஆர்ப்பாட்டங்களும் எனக்கெதிராக பொய்ப்பிரசாரங்களும் செய்துவந்துள்ளனர். இதன் உச்சகட்டமாக மேற்படி விமலேஸ்வரி என்பவர் பத்திரிகை மாநாடொன்று நடத்தி கனடாவிலிருந்து பெண்கள் வாழ்வாதாரத்திற்கென்று அனுப்பப்பட்ட 21.2 கோடி ரூபாவை நான் கையாடிவிட்டதாக குற்றஞ்சாட்டினார்.

இது குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் மத்திய செயற்குழுவில் கேள்வியெழுப்பப்பட்டதாகவும் பொருளாளர் பொ. கனகசபாபதி இப்பணம் கட்சிக் கணக்கிற்கு வரவில்லையென்று சொன்னதாகவும் அப்பணத்தை நான் பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொண்டதாகவும் பொய்யாக குற்றஞ்சாட்டியிருந்தார். இதைப்பற்றி வட்டக்கட்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் வைத்து கட்சித் தலைவருக்கு கூறியிருந்தேன். தலைவர் அவர்கள் இரண்டு நாட்களுக்குள் உடனடி நடவடிக்கை எடுத்து விமலேஸ்வரியை அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்குமாறும் கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்துமாறும் எழுத்துமூலமாக பகிரங்கமாக பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியதையடுத்து பொதுச் செயலாளரால் அவர் கட்சியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்பட்டார். நானும் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து ஆயிரம் கோடி ரூபா கோரி வழக்குத் தாக்கல் செய்வதற்கான முன்நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன்.

இந்த விடயத்தில் கட்சித் தலைமை உடனடி நடவடிக்கையெடுத்ததையிட்டு நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்படுவதால் இது குறித்து நான் வேறெதுவும் இப்போது சொல்ல விரும்பவில்லை. இத்தனைப் பொய்யான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என்மீது சுமத்தப்பட்ட போதும் அவற்றை மறுத்ததற்கு மேலதிகமாக எனது சகவேட்பாளர்கள் எவருக்கும் எதிராக தேர்தல் காலத்திலே நான் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. தேர்தலில் நேரடியாக போட்டியிடாத தவராசாவிற்கு எதிராக கூட, அவருடைய பெயர் தேசியப்பட்டியலில் இருந்த காரணத்தினால் நான் எதுவும் கூறவில்லை. அவரைப்பற்றி சொல்வதற்கு ஏராளமான விடயங்கள் இருந்த போதிலும் அவர்கள் செய்த தவறை நானும் செய்யக்கூடாதென்பதற்காக மௌனம் காத்தேன்.

இவ்வளவு தாக்குதல்களும் தேர்தல் காலத்திலே எனக்கெதிராகவும் சிறிதரனுக்கு எதிராகவும் கட்சி உறுப்பினர்களாலேயே நடத்தப்பட்டபோதும் பதிலுக்கு நாமும் அவ்வாறே செயற்படமுடியாமல் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் கூட யாழ். தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பாக சிறிதரனும் நானும் மட்டுமே வெற்றிபெற்றிருக்கிறோம். இது கட்சி முக்கியஸ்தர்கள் கட்சியின் சக வேட்பாளர்கள் எடுத்த முயற்சிகளை முறியடித்து பெற்ற வெற்றி. எமக்கெதிராக செயற்பட்டவர்கள் தாமும் தோற்று கட்சிக்கும் பாரிய தோல்வியை பெற்றுக்கொடுத்திருக்கிறார்கள்.

தேர்தலுக்கு அடுத்தநாள் அதாவது, ஓகஸ்ட் 6ஆம் திகதியன்று வாக்கெண்ணும் நடவடிக்கைகள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற வேளையில் நடந்த சில சம்பவங்கள் சம்பந்தமாகவும் சில விடயங்களைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். யாழ். மத்திய கல்லூரியிலிருந்து சில மீற்றர் தொலைவிலே நான் தங்கியிருந்தபோதும் கூட வாக்கெண்ணும் நடவடிக்கைகள் நடந்து முடியும்வரை நான் அங்கு செல்லவில்லை. எனது சக வேட்பாளர்கள் சிலர் கல்லூரி வளாகத்தினுள் அமர்ந்திருந்ததை முகப்புத்தகத்தின் நேரலை மூலம் கண்டறிந்தேன். குறித்த ஒரு தருணத்தில் சித்தார்த்தன் அங்கு வருகை தந்ததையும், இறுதி முடிவுகள் பிரகடனப்படுத்தும் நிலையத்திற்குள் சென்று தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் மஹேசனோடு அவருடைய மேசையினருகில் அமர்ந்து பேசியதையும் கண்டேன்.

அவர் அங்கே வந்தபோது திரு. சிவாஜிலிங்கம் அவரை அணுகி “தர்மலிங்கத்தின் மகன் சுமந்திரனிடம் தோற்பதா?” என்று பெரிய கூச்சலை எழுப்பியிருந்தார். திரு. சித்தார்த்தன் தான் 2ஆம் இடத்தில் இருப்பதாகவும் நான் 5ஆம் இடத்தில் இருப்பதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட மூலங்களிலிருந்து தனக்கு தகவல் கிடைத்திருந்ததாக ஊடகங்களுக்குச் சொன்னார்.

> **“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் வேட்பாளர்களும் கூட இப்படியான கருத்துகளை தேர்தல் காலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இதிலே செல்வம் அடைக்கலநாதன் முதன்மையானவர். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்து வேட்பாளர்கள் சித்தார்த்தனும் கஜதீபனும் சேர்ந்து வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களில் என்னையும் சிறிதரனையும் குறிவைத்துத் தாக்கியிருந்தனர்.”**

சிறிதுநேரத்திற்குப் பிறகு எமது முகவர்கள் வாக்கெண்ணும் பணிகள் முடிவடைந்து விட்டதாகவும் முடிவுகள் அறிவிப்பதற்காக ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் எனக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அறிவிப்பை செவிமடுப்பதற்காக நான் அங்கே சென்றேன்.

2015 பொதுத் தேர்தலின்போதும் எமது கட்சியில் வெற்றிபெற்றவர்கள் அந்த இடத்திலே அமர்ந்திருந்தபோதுதான் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதே நடைமுறையை பின்பற்றி அதே அறைக்குள் சென்று பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகத்தரின் மேசையிலிருந்து சற்றுத்தள்ளி அடுக்கிவைக்கப்பட்ட கதிரைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அறிவிப்பு முகவரின் அருகில் அமர்ந்திருந்து அவருடன் உரையாடிக்கொண்டு அறிவிப்புக்காக காத்திருந்தேன். பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகத்தரோடு நான் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அப்போது திருமதி சசிகலா ரவிராஜ் அவர்களும் அந்த அறைக்குள் வந்து பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகத்தரோடு பேசினார்.

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்...**

# வாழைச்சேனை ஐஸ் தொழிற்சாலைக்கெதிரான ஆர்ப்பாட்டம்: பிள்ளையான் மீது பழி சுமத்தி இனவாதத்தை ஏற்படுத்த முயற்சி

## - பிரதேச சபை உறுப்பினர் கே.எல்.அஸ்மி



( ஓட்டமாவடி)

வாழைச்சேனை ஐஸ் தொழிற்சாலைக்கெதிரான ஆர்ப்பாட்டம் என்ற போர்வையில் நாடாளு மன்ற உறுப்பினர் பிள்ளையான் மீது பழி போட்டு இனவாதத்தைத் தூண்டும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது - என கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.எல்.அஸ்மி தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை ஐஸ் தொழிற்சாலை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக எல்லைக்குள் அமைந்துள்ள இரண்டு ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைகளால் சுற்றுச் சூழல் மாசடைவதாகவும் நிலக்கீழ் நீர் உறிஞ்சப்படுவதனால் கிணறுகள் வற்றி குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் தெரிவித்து கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கே.குணசேகரன் (சேகர்) தலைமையில் ஆர்ப்பாட்டமொன்று கடந்த 21ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டம் ஒரு தலைப்பட்சமான இனவாதப்போக்குடன் முன்னெடுக்கப்பட்டதுடன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆட்சியின் கீழுள்ள கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் மீதும் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் மீதும் பழி போட்டு முஸ்லிம்களுக்கெதிராக திசை திருப்பி இன விரிசலை உண்டுபண்ண மேற்கொள்ளப்பட்ட ஓர் அரசியல் முன்னெடுப்பாகவே இது தோன்றுகின்றது.

கோறளைப்பற்று, கோறளைப்பற்று மத்தி ஆகிய பிரதேசங்களில் மொத்தமாக நான்கு ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைத்துள்ளதுடன், குறித்த தொழிற்சாலைகளுள் கோறளைப்பற்று மத்தியில் அமைந்துள்ள இரு தொழிற்சாலைகளின் மீதே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ளமை தெளிவாகின்றது.

குறித்த தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் அதிகாரசபை, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றால் வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் வைத்து, பிரதேச சபை அனுமதி வழங்கும் நடைமுறை முறையாகப் பேணப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், நீர் வழங்கல் அதிகாரசபை குறித்த பிரதேசத்தின் நீரின் தன்மையைப் பரிசோதித்த பின்னரே அனுமதியை வழங்கும் நடைமுறையையும் பின்பற்றியுள்ளது. அவ்வாறு நீர் அசுத்தமுள்ளதாக இருந்திருப்பின், அனுமதி மறுக்கப்பட்டு, பிரதேச சபைக்கு முறையாக அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கும். அவ்வாறான எந்தவித அறிக்கைகளும் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இனவாதப்போக்கில் செயற்படுத்துவதுடன், பிரதேச சபைக்கெதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் போர்வையில் நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானின் தலைமைக்கும் அவரது தலைமையின் கீழ் அமைந்துள்ள பிரதேச சபை ஆட்சிக்கும் சேறு பூசும் நடவடிக்கையை முன்னெடுப்பதாக அமைந்துள்ளது.

இவற்றை நோக்குமிடத்து குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த நபர் இப்பிரதேசத்தில் தொடராக இனவாத ரீதியான ஆர்ப்பாட்டங்களையும் செயற்பாடுகளையும் காலாகாலமாக முன்னெடுத்து வருபவர் என்பதுடன், அதே பாணியிலேயே இத்தனையும் மேற்கொண்டு சரிந்துவரும் தனது மக்கள் செல்வாக்கைத் தக்கவைக்க முயற்சி மேற்கொண்டு வருகின்றமை தெரிகின்றது

நாட்டின் இன்றைய சூழலில் சிறுபான்மையினராகிய நாம் பாகுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து செயற்படவேண்டிய சூழலில் இவ்வாறானவர்களுக்கு இடமளிக்காதிருப்போமாக. அத்துடன், எமது பிரதேசத்தை முன்னேற்றும் வகையில் எமது பிரதேசங்களில் தொழிற்சாலைகளை உருவாக்க நாம் முயற்சி மேற்கொள்வதுடன், எமது பிரதேச வருமான இழப்பை மேற்கொள்ளும் செயற்பாடுகளைத் தவிர்ப்போமாக என குறிப்பிட்டுள்ளார்.





# முன்னாள் தவிசாளர் நௌஷாட்டுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

## - மக்கள் காங்கிரஸினால் மூவரடங்கிய குழு நியமனம்..!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ.எம்.எம்.நௌஷாட் மீதான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்ளும் வகையில், மூவர் அடங்கிய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அரசியல் அதிகாரபீடம் கூடி இந்த முடிவெடுக்கப்பட்டதாகவும் தவிசாளர் அமீர் அலி, பொருளாளர் ஹுசைன் பைலா மற்றும் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர் ஜவாத் ஆகியோர் இந்த ஒழுக்காற்று விசாரணைக் குழுவில் இடம்பெறுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கமைய, அண்மையில் ஏ.எம்.எம்.நௌஷாட் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டமையை கட்சியின் அதிகாரபீடம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# "மத்திய கிழக்கில் அந்தரிப்போரை அழைத்துவர ஆவன செய்யுங்கள்"

## - ஜனாதிபதிக்கு ஹாபிஸ் எம்.பி. கடிதம்!

(மட்டக்களப்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் நாடு திரும்பமுடியாமல் தவிக்கும் மத்திய கிழக்கிலுள்ள இலங்கையரை அழைத்துவர அவசர ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தவிசாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் ஹாபிஸ் நஸீர் எம்.பி. தெரிவித்துள்ளதாவது;

எவரும் எதிர்பாராமல் பரவிய கொரோனா வைரஸால் உலகமே முடங்கி, மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் இருந்தனர். ஒவ்வொரு நாடும் இப்பாதிப்பிலிருந்து தப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது மட்டுமன்றி, தொடர்புகளையும் துண்டித்தன. இதனால் விமான நிலையங்கள், துறைமுகங்கள் மூடப்பட்டு, நாடுகளுக்கிடையிலான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இது பலரை நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வைத்தது மட்டுமன்றி, வெளிநாடுகளில் வாழும் உறவினர்களை நினைத்தும் கவலைப்பட வைத்துள்ளது.



இந்நிலையில், மத்திய கிழக்கில் தொழிலுக்காகச் சென்றுள்ளவர்கள் பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். நாட்டின் அந்நியச் செலாவணியில் அதிகளவு பங்களிக்கும் மத்திய கிழக்கு தொழிலாளர்களை நாம் கைவிடமுடியாது. வசதியுள்ளவர்கள் அங்கிருந்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து நாடு திரும்பினாலும் விடயம் தெரியாத, வசதி குறைந்த எமது உழைப்பாளர் படை, மத்திய கிழக்கில் நிர்க்கதிக்குள் தவிக்கின்றது. தூதரகங்களுடன் தொடர்புகொள்ள முடியாமலும், வேலை செய்த இடங்களில் கைவிடப்பட்டும் இவர்கள் அலைக்கழிவதாக எமக்குச் செய்திகள் கிடைக்கின்றன. எனவே, இவர்களை உடன் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும்.

அதிலும், அங்குள்ள பெண் தொழிலாளர்களின் நிலைமைகள் இன்னும் பரிதாபமாக உள்ளமை எம்மைக் கவலைப்படுத்துகிறது. இந்த இளம் தாய்மார்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் இவர்களை எதிர்பார்த்து ஏங்குகின்றனர். எனவே, அங்குள்ள இலங்கைக்கான தூதரகம் துரிதமாகச் செயற்பட்டு, இவ்வாறானவர்களின் தகவல்களைப் பெற்று அவர்களை இலங்கைக்கு அனுப்பும் பணிகளில் ஈடுபடுவது துரிதப்படுத்தப்படல் அவசியம்.

குறிப்பாக, வறிய குடும்பங்களிலிருந்து பிழைப்புக்காகவும் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கும் மத்திய கிழக்கு சென்றுள்ள எமது உடன்பிறப்புகளை தொடர்ந்தும் நிர்க்கதிக்குள்ளாக்கக்கூடாது. குறிப்பாக, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பத்திலிருந்து சென்றுள்ள இப்பெண் தொழிலாளிகள், ஏற்கனவே பல வருடங்கள் உறவுகள், குடும்பங்களைப் பிரிந்த துயருடனே நீண்டகாலம் பணியாற்றியுள்ளனர். எனவே, இவர்களது கடவுச்சீட்டு, விமானச்சீட்டு உள்ளிட்டவற்றில் ஏற்பட்டுள்ள சட்டச்சிக்கல்களை இல்லாமலாக்கி, உடன் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என அக்கடிதத்தில் ஹாபிஸ் நஸீர் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில்

# பட்டதாரிப் பயிலுனர்களுக்கான நியமனங்கள் வழங்கிவைப்பு







(வவுணதீவு)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் அரசாங்கத்தினால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்களை வழங்கும் செயற்றிட்டத்திற்கமைவாக இப் பிரதேசத்தில் 62 பட்டதாரிகளுக்கு பயிலுனர் நியமனங்கள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டது.

தொழிலற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிலுனர் பயிற்சி வழங்குவதற்கான நியமனக் கடிதங்களே இதன்போது வழங்கப்பட்டன.

மாவட்ட செயலகத்தின் அனுமதிக்கமைவாக இந்நியமனக் கடிதங்கள் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், உதவி பிரதேச செயலாளர் சுபா சுதாகரன் ஆகியோரால் உரிய பயிலுனர்களுக்கு கையளிக்கப்பட்டது.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின்கீழ் தொழிலற்ற பட்டதாரிகளுக்கு தொழில்களை வழங்கும் பொருட்டு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கு கிழக்கு தபால் திணைக்களத்தின் கௌரவிப்பு



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண தபால் திணைக்களத்தினால் தபால் சேவைகள் மற்றும் வெகுஜன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பிரதம தபாலக கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது இராஜாங்க அமைச்சரை கௌரவிக்கும் முகமாக அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளினால் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண பிரதி தபால்மா அதிபர் திருமதி ஜெயானந்தி திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தபால்திணைக்களத்தின் உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பெருமளவானோர் இதன்போது கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில்

# சாரதி அனுமதிப்பத்திர மருத்துவ பரிசோதனை சான்றிதழ் பெறுவதில் மக்களுக்கு சிரமம்

(காரைதீவு)

அம்பாறை மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு தேவையான மருத்துவ பரிசோதனை சான்றிதழ் பெறுவதற்குள்ள ஒரேயொரு அரச அங்கீகாரம் பெற்ற நிலையத்தில் சேவைகள் சரியான முறையில் தங்களுக்குக் கிடைப்பதில்லை என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர் .

இது குறித்து மேலும் தெரியவருவதாவது; சாரதிகளுக்கான மருத்துவ சான்றிதழ் பெறுவதற்காக தூர இடங்களிலிருந்து அதிகாலைவேளையில் அம்பாறையில் அமைக்கப்பட்ட நிலையத்திற்கு சென்றாலும் அங்கு இலவசமாக வழங்கவேண்டிய விண்ணப்பப்படிவம் கிடைப்பதில்லை. அத்துடன், பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கவேண்டிய விண்ணப்பப்படிவங்கள் தனியார் கடைகள் மற்றும் வீதிகளில் ஒரு சிலரினால் அதிக பணத்திற்கு விற்பனை செய்யப்பட்டு ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும் , மருத்துவ பரிசோதனை சான்றிதழ் பெறுவதற்காக சென்றால் மருத்துவ பரிசோனை நிலையத்தில் சிங்கள மொழி மாத்திரமே உபயோகிக்கப்படுவதால் மருத்துவ பரிசோதனைக்குச் செல்லும் அப்பாவி பாமர பொதுமக்களுக்கு சிங்கள மொழி தெரியாமல் பல இன்னல்கள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகவும் இதனால் மருத்துவ சான்றிதழ் பெறுவதற்காக அங்கு பல முறை செல்லவேண்டிய அவலநிலை ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பொறுப்புவாய்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் இவ்விடயத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு பொதுமக்களை ஏமாற்றும் நபர்களுக்கு ஏதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







திருகோணமலையில் இன்டராக்ட் கழகத்தினால் ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, என்பனவற்றுக்கு மாணவர்களின் வசதி கருதி கைகழுவும் உபகரணங்கள் வழங்கப்பட்டதை படங்களில் காணலாம். ரோட்டரி கழகத்தின் தலைவர் சுரேஷ் சுப்பிரமணியத்தின் ஏற்பாட்டிலேயே இவை வழங்கப்பட்டன.

## அம்பாறை மாவட்டத்தில்

# பழையவர்கள்தான் எம்.பி.யாக வேண்டுமென்ற மரபை மக்கள் காங்கிரஸ் உடைத்தெறிந்துள்ளது

### - ரிஷாட் பதியூதீன் தெரிவிப்பு -

பழையவர்கள்தான் எம்.பி.யாக வேண்டுமென்ற அம்பாறையின் எழுதப்படாத மரபை உடைத்தெறிந்து, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் இளையவரான புதியவர் ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளோம் - என்று அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நடைபெற்றுமுடிந்த பொதுத் தேர்தலில், அம்பாறை மாவட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் வெற்றிபெற்ற ஊடகவியலாளர் முஷாரப்பை வாழ்த்தி, கடந்த ஞாயிறன்று பொத்துவிலில் இடம்பெற்ற வெற்றிப் பெருவிழாவில் பிரதம விருந்தினராக ரிஷாட் எம்.பி. பங்கேற்றிருந்தார். இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.



தொடர்ந்து இங்கு பேசிய அவர், "முடியாதென்று எதையுமே விட்டு விலகிவிடக்கூடாது. பிரச்சினை வரும்போது எதிர்த்துநின்று, தூய எண்ணங்களுடன் செயற்படும்போது, இறைவனின் உதவியும் அருளும் நமக்குக் கிடைக்கும். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் ஒரு உதாரணப் புருஷராக விளங்குகின்றார். தோல்விகள்தான் வெற்றிக்கான பாதையென்பதை அவர் நிரூபித்துள்ளார்.

வரலாற்றில் பொத்துவில் மண், இம்முறைபோல் என்றுமே ஒற்றுமைப்பட்டது கிடையாது. முஷாரப்பின் வெற்றி வெறுமனே ஒரு தனிமனித வெற்றியல்ல; எமது கட்சியில் போட்டியிட்ட அத்தனை வேட்பாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் பரந்தும் செறிந்தும் வாழும் நமது ஆதரவாளர்கள், தொண்டர்கள், கட்சி முக்கியஸ்தர்களின் உழைப்பினாலும், தியாகத்தினாலும் கிடைத்த சமூகத்துக்கான வெற்றி.

அம்பாறையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பெற்றுக்கொள்ள முடியுமா? இல்லையா? என்பது ஒரு கேள்விக்குறியாக இருந்தபோது, இறைவனின் நாட்டத்தாலும் நம் அனைவரினதும் உழைப்பினாலும் இந்த வெற்றி நமக்குக் கிடைத்தது.

சுதந்திரத்துக்குப் பின்னர், பொத்துவில் மண், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பெற்றிருப்பது, நமக்குக் கிடைத்த மகிழ்ச்சி மட்டுமல்ல, இந்த ஊரையும் அம்பாறை மாவட்டத்தையும் அனைவரினதும் கவனத்துக்கும் உட்படுத்தியுள்ளது.

முஷாரப் பொத்துவிலின் சொத்தாக இருக்கின்றபோதும், அம்பாறை மாவட்டத்தில் மக்கள் காங்கிரஸின் முதுசமாக இருக்கின்றார். எனவே, பொத்துவில் மக்களாகிய நீங்கள், அம்பாறை மாவட்டத்தின் அனைத்து மக்களுக்கும் அவர் பணிபுரியக்கூடிய வகையில், உந்துசக்தியாக இருக்க வேண்டும். சமூகத்துக்காக உழைக்கக் கூடிய அவருக்கு, இந்த மாவட்டத்தின் எதிர்கால மேம்பாடுகளில் நிறையப் பொறுப்புகள் உள்ளன.

நாடாளுமன்றத்தில் அவரது கன்னி உரையைக் கேட்ட வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எம்.பி. என்னிடம் வந்து, "நல்ல ஆற்றல் உள்ளவரை நாடாளுமன்ற உறுப்பினராக கொண்டுவந்து இருக்கின்றீர்கள்" என்றார். இது நமக்குப் பெருமை தருகின்றது.

இம்முறை தேர்தலில், புத்தளம் மாவட்டத்தில் எல்லாக் கட்சிகளின் உழைப்பினாலும் கிடைத்த அலி சப்ரி ரஹீம் எம்.பி. குறித்தும், நாம் பெருமைகொள்கின்றோம். மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரான அவர், 33 வருடங்களின் பின்னர் எம்.பி.யாகியுள்ளார்.

அதேபோன்று, 2015ஆம் ஆண்டு தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் இஷாக் ரஹ்மான் எம்.பியை வெற்றிபெறச்செய்து சாதனை படைத்ததுடன், இம்முறையும் அவர் இரண்டாம் முறையாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்" - என்றார்.




# தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்

### - இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

(பாண்டிருப்பு)

தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும். அதற்கான கலந்துரையாடல்கள், சந்திப்புகளை பிரதேச, மாவட்ட ஊடகவியலாளர்களிடம் ஏற்படுத்தி வருகின்றேன். அனைத்து ஊடகவியலாளர்களின் கருத்துகளையும் உள்வாங்கி ஊடகத்துறையையும், ஊடகவியலாளர்களையும் முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்

இவ்வாறு தபால்சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

நேற்று தமிழர் ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இ.கோபாலசிங்கம் தலைமையில் இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. ஒன்றியத்தின் செயலாளர் எம்.செல்வி, பொருளாளர் எஸ்.நாகராஜா, உப செயலாளர் வி.டினேஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் செ.துஜியந்தன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தை தளமாகக்கொண்டு கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கத்தை ஊடகத்துறை அமைச்சில் பதிவுசெய்தல், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில் அமைந்துள்ளதால் எதிர்வரும் காலங்களில் ஊடகத்துறைக்குள் அதிகளவிலான தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ளல், ஊடகத்துறையினருக்கு அம்பாறையில் வீடமைப்புத் திட்டமொன்றை ஏற்படுத்துதல், இலவச பஸ் பணயச்சீட்டுகளை பெற்றுக்கொடுத்தல், ஊடக உபகரணங்களை வழங்குதல், வறுமைக்கோட்டின்கீழுள்ள ஊடகவியலாளர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுதல், அனர்த்தங்களின்போது ஊடகவியலாளர்களுக்கும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், அம்பாறை மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய ஊடகவியலாளர் சங்கத்தின் சிபாரிசில் புதிய செய்தியாளர்களை நியமித்தல், அரச காணிகள் வழங்கும் போது ஊடகவியலாளர்களையும் முதன்மைப்படுத்தல் போன்ற கோரிக்கைகள் அம்பாறை மாவட்ட தமிழர் ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





ஓட்டமாவடி பிரதேச சபையின் சுகாதாரப் பிரிவு ஊழியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வும், சிநேகபூர்வ சந்திப்பும் பிரதேச சபையில் இடம்பெற்றது. இதில் ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நெளபர், முன்னாள் தவிசாளர் ஐ.டி.அஸ்மி, பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஏ.அக்பர், மேற்பார்வை உத்தியோகத்தர்களான எம்.ஜே.அல்பத்தாஹ், எஸ்.எம்.அக்பர் மற்றும் சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது ஓட்டமாவடி பிரதேச சபையின் சுகாதாரப் பிரிவு ஊழியர்களுக்கான சீருடைகளை தவிசாளர் ஏ.எம்.நெளபர், முன்னாள் தவிசாளர் ஐ.டி.அஸ்மி ஆகியோர் வழங்கினர். (படங்கள்: கல்குடா)

# சேனைப் பயிர்ச்செய்கை செய்வதற்கு வன இலாகா அதிகாரிகள் அனுமதி மறுப்பு

(திருமலை)

திருகோணமலை - ரொட்டவெவ மற்றும் அத்தாபெந்திவெவ பகுதிகளில் சேனைப் பயிர்ச்செய்கை செய்வதற்கு பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியும், வன இலாகா அதிகாரிகள் அனுமதி மறுப்புத் தெரிவித்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த காலம் தொடக்கம் இன்றுவரைக்கும் சேனைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருவதாகவும் தற்போது வன இலாகா அதிகாரிகள் தங்களுக்கு சொந்தமான காணிகள் எனக்கூறி சேனைப் பயிர்ச்செய்கையை முன்னெடுக்கவேண்டாமென தெரிவித்து வருவதாகவும் சேனைப் பயிற்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வருடா வருடம் சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொண்டுவரும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு எதிராக வன இலாகா அதிகாரிகள் வழக்குகள் பதிவுசெய்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சேனைப் பயிர்ச்செய்கை யாளர்களின் நலன் கருதி அரசியல்வாதிகளும் அரசாங்க உத்தியோகத்தர்களும் சாதகமான ஒரு பதிலை தரவேண்டுமெனவும் தாங்கள் யுத்தகாலத்தில் முன்னெடுத்துவந்த சேனைப் பயிர்ச்செய்கையை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பாக மொரவெவ பிரதேச செயலாளர் பாத்திய விஜயந்தவிடம் கேட்டபோது, பல வருடங்களாக அப்பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அக்காணி வன பரிபாலன திணைக்களத்திற்கு சொந்தமான காணி என உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார்.



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் தெழுங்கு நகர் பிரதேசத்திற்கான ரயில்வே கடவையொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மேற்கொண்டுள்ள நிலையில், அதன் அமைவிடம் தொடர்பான இடங்களை கண்டறிய மேற்படி ஏற்பாடுகள் தொடர்பான புகையிரத உதவிப் பொறியியலாளருடன் நேரில் சென்று பார்வையிட்டதோடு, அப்பகுதி இளைஞர்களிடம் அங்குள்ள நிலைப்பாடு தொடர்பாகவும் அவர் கேட்டறிந்து கொண்டார். (படம் : கந்தளாய்)

# கிராம மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு



கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் குறைபாடுடையதும் தனித்து விடப்பட்டதுமான கிராமங்களை அடிப்படையாகக்கொண்ட கிராமங்களின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 12 மில்லியன் ரூபா செலவில் பாரிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கமைவாக தெரிவுசெய்யப்பட்ட மண்முனை தென்எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட துறைநீலாவணை வடக்கு, வடக்கு1 பிரிவுகளில் மக்களின் அடிப்படையான தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் முன்னாயத்த கள ஆய்வுக் கலந்துரையாடல் நிகழ்வு மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி காமினி இன்பராசா தலைமையில் நேற்று திங்கட்கிழமை துறைநீலாவணை கண்ணகி பாலர் பாடசாலைக் கட்டிடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஜெ.தனஞ்சயன், மண்முனை தென்எருவில்பற்று களுவாஞ்சிக்குடி உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன், திருகோணமலை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மட்டு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டத்திற்குப் பொறுப்பான பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம மட்ட கிராம சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது புனரமைக்கப்படாத வீதிகள் புனரமைப்பு வேலைத்திட்டம் மற்றும் பல்தேவைக் கட்டிடம் அமைத்தல் தொடர்பான விடயங்கள் முன்மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை

கிழக்கு இளைஞர்கள் அமைப்பு- ஸ்ரீலங்கா ஏற்பாடுசெய்த தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைப்பின் தலைவர், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தானீஷ் றகுமத்துல்லாஹ் தலைமையில் சாய்ந்தமருது அகடமி - (என்) கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வளவாளராக அஷ்ரக் இஸ்மாயில் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக அமைப்பின் ஆலோசகர் எஸ். அஷ்ரப்கான், அமைப்பின் நிர்வாக செயலாளர் முபாஸித் அல்பதாஹ், அமைப்பின் பொருளாளர் இமாஸ் முஹம்மட், தேசிய அமைப்பாளர் எஸ். சம்சித், உயர்பீட உறுப்பினர் சலீம் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். கருத்தரங்கில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.






# தமிழ்மொழி பழைமையானது என்பது சி.வி.யின் தனிப்பட்ட நிலைப்பாடு!

## சுமுகமான பேச்சுவார்த்தையினூடாக தேசிய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வோம் என்கிறார் திஸ்ஸ

(நா.தினுஷா)

தமிழ்மொழியே பழைமையானது என்பது சி.வி.விக்னேஸ்வரனின் தனிப்பட்ட நிலைப்பாடாக இருக்கலாம். அது அவரது உரிமை. ஆனால், இதுபோன்ற கருத்துகளால் இனவாதிகளின் எதிர்ப்புகளை சந்திக்க நேர்ந்தால், தற்போது கட்டியெழுப்பப்பட்டுவரும் தேசிய ஒற்றுமை சிக்கல் நிலையை சந்திக்க நேரிடும் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்து தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மக்கள் மத்தியில் தேசிய ஒற்றுமை கட்டியெழுப்பப்பட்டுவருகிறது. மக்களிடையே காணப்பட்ட எதிர்ப்புகள் தற்போது குறைவடைந்துவருகின்றன. ஆகவே, இவ்வாறானதொரு சூழ்நிலையில், புதிய பிரச்சினைகளை உருவாக்குவதை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பெரும்பான்மை மக்கள் மத்தியில் இருக்கும் ஒருசில இனவாதிகளின் எதிர்ப்புக்குள்ளாகக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

இவ்வாறான கருத்தினால் விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் சார்பிலும் தவறிழைத்து விட்டார். ஸ்ரீலங்கா சமசமாஜ கட்சி என்ற அடிப்படையிலும், இலங்கையர்கள் என்ற அடிப்படையிலும் சகல இன மக்களுக்கும் சமமான உரிமை வழங்கப்படவேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். அதற்காக புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஆகவே, தற்போதிருக்கும் சூழ்நிலையில் சுமுகமான பேச்சுவார்த்தையினூடாக தேசிய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்பாகும். விக்னேஸ்வரன், எந்த மொழி பழைமையான மொழி என்று வாதிப்பதால் தேவையற்ற பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். சி.வி.யை நாடாளுமன்றத்தில் சந்தித்தேன். அதன்போதும், தற்போது நாடாளுமன்றத்தில் இவ்வாறான கருத்துகளை முன்வைப்பது பொருத்தமற்றது என்று அவருக்கு கூறினேன்.

அவரின் நிலைப்பாட்டில் அவர் இருக்கமுடியும். ஆனால், இதுபோன்ற விடயங்களில் அவர் பொறுமையாக இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் வெவ்வேறு நிலைப்பாட்டில் இருக்கமுடியும். அது தனிப்பட்ட உரிமை. தனிப்பட்ட நிலைப்பாடுகளை பிரபல்யமாக பேசுவதனூடாக தற்போதுள்ள நிலை சிக்கலை சந்திக்கும். பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நிலையை கட்டியெழுப்புவதற்கு பதிலாக விரோதங்கள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உருவாகும் - என்றார்.

# பாடசாலை மாணவர்களுக்கு பிரத்தியேக பஸ்சேவை விரைவில்




**சிசு செரிய – பாடசாலை மாணவர்களின் பஸ் சேவைக்கு பயன்படும் பஸ்களை நிறப்பூச்சு பூசும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.**

**தற்போது 10 பஸ்களுக்கு மஞ்சள் நிறம் பூசப்பட்டுள்ளதாக அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.**

**ஜனாதிபதியின் ஆலோசனைக்கு இணைவாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை மாணவர்களின் போக்குவரத்துக்காக மட்டும் பயன்படுத்தவே இவ்வாறு நிறப்பூச்சு பூசும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.**

# தூதரகப் பணிகளுக்கு புதிய பணியாளர்கள் நியமனம்

தூதுவராலயங்களில் பணிக்கமர்த்தப்படும் புதிய பணியாளர்கள் விபரங்களைஅனுமதிக்காக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மூலம் தூதுவராலய கடமைகளுக்காக சென்றிருந்த கடமைக்காலம் நிறைவடைந்தவர்கள் மீள நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தால் நியமனம் வழங்கப்பட்ட பொருத்தமற்ற பலர் தூதரகங்களில் இருப்பதாக தெரிவித்த அமைச்சர், இதன்பிறகு அரச சேவையிலுள்ளவர்கள் மட்டுமே தூதுவராலய கடமைகளுக்காக இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டது

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதவிக்காலத்தில் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளது. அதற்கமைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 81 பேரின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு குறித்து விரைவில் அரச உயர்மட்டம் தீர்மானம் எடுக்கும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகினர் ரணில் – அகில

## - சமய பாடவிதானங்களில் கல்வி அமைச்சரின் தலையீடு தொடர்பில் வினவப்பட்டதாக அகில தெரிவிப்பு





படப்பிடிப்பு : லலித் பெரேரா

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் நேற்று உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகினர்.

அறிக்கையை பதிவுசெய்ய ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவு முன் ஆஜராகுமாறு ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் பொருத்தமான திகதியை மாற்றம் செய்யுமாறு அறிவித்தே, நேற்று திங்கட்கிழமை முன்னிலையாகியிருந்தார்.

இதற்கிடையில் அகில விராஜ் காரியவசம் விசாரணைசெய்யும் ஆணைக்குழுவில் ஏற்கனவே ஒரு அறிக்கையை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் நேற்றைய தினம் முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசத்திடம் இரண்டு மணிநேர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அகில விராஜ் காரியவசம் பதிலளிக்கையில்,

**ஊடகவியலாளர்:** இன்று ஆணைக்குழுவில் எந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன?

**பதில்:** கல்வி அமைச்சர் என்ற அடிப்படையில் பாடவிதானங்கள், ஆசிரியர் கையேடுகள், சமயப் புத்தகங்கள் ஆகியவற்றை தயாரிக்கும்போது எனது தலையீடு குறித்து வினவப்பட்டது. இந்த பாடவிதானங்கள் தயார்செய்யப்பட்டதன் பின்னர் பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படும். இந்த விடயத்தில் அமைச்சரின் தலையீடு இருக்காது.

**ஊடகவியலாளர்:** நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. உங்களது தரப்பினரே அப்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்களாக செயற்பட்டார்கள். இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் உங்களுக்கும் பொறுப்பு உள்ளதல்லவா?

**பதில்:** உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான பொறுப்பு யாருக்கு உள்ளது என்பதை ஆணைக்குழு தெளிவுபடுத்தும். கல்வி அமைச்சர் என்ற அடிப்படையில் தனியாக பொறுப்பு கூறமுடியாது. ஆனால், புத்தகங்களை தயார் செய்தது தொடர்பில்தான் என்னிடம் வினவப்பட்டது.

**ஊடகவியலாளர்:** ஆனால், நீங்கள் அப்போதைய அரசாங்கத்தில் இருந்த அமைச்சர் அல்லவா?

**பதில்:** அதுதொடர்பில் இதற்கு முன்னரும் தெரிவித்திருந்தோம். பாதுகாப்பு அமைச்சுப் பதவி மற்றும் அப்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்புக்கூற வேண்டும் - என்று தெரிவித்தார்.

# நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற வீதிவிபத்துகளில் மூவர் பலி!

கல்கடே, அட்டவில்லுவ மற்றும் முத்தெட்டுபல ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற வெவ்வேறு வாகன விபத்துகளில் மூவர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துகளில் உயிரிழந்துள்ளவர்கள் 16, 27 மற்றும் 78 வயதானவர்களென்றும் இந்த விபத்துச்சம்பவங்கள் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கடே பிரதேசத்தில் பண்டாரகம திசையிலிருந்து கெஸ்பேவ திசையை நோக்கி பயணித்த வேன் ஒன்று நேரெதிராக வந்த மோட்டார் சைக்கிளின் மீது மோதியதால் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சைக்காக பண்டாரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார். 27 வயதுடைய வெல்மில்ல, வெல்லல பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வேன் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டவில்லுவ - கிவுல வீதியில் ஹேமசந்ர மாவத்தைக்கு திரும்பும் சந்தியில், கிவுல திசையை நோக்கி பயணித்த லொரி அதேதிசையில் பயணித்த கெப் ரக வாகனத்தை முந்திச்சென்றபோது வீதியில் நடந்துசென்ற பெண்ணொருவர் மீது மோதியதால் மற்றுமொரு விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் படுகாயங்களுக்குள்ளான குறித்த பெண் சிகிச்சைக்காக புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார். 78 வயதுடைய அட்டவில்லுவ, புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பில் லொரியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொடகவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேபெத்த கல்பாய வீதியில் முத்தெட்டுபல, தெனிய சந்தியில் பல்லேபெத்த திசையிலிருந்து கல்பாய திசையை நோக்கி பயணம் செய்த மோட்டர் சைக்கிளின் சாரதியால், மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததால் வீதியில் புரண்டு நேரெதிராக வந்த பஸ்ஸில் மோதியதால் மேலுமொரு விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி பல்லேபெத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் உயிரிழந்தவர் 16 வயதுடையவர் என்பதோடு கடுபில்லந்த, முத்தெட்டுபொல பிரதேசத்தைச் சேர்ந்தவர். இந்த விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை முறையே பண்டாரகம, புத்தளம் மற்றும் பொடகவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள்

**01.09.2020 (செவ்வாய்க்கிழமை)**

**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | நிம்மதி |
| ரிஷபம் | - | சுகம் |
| மிதுனம் | - | நன்மை |
| கடகம் | - | விவேகம் |
| சிம்மம் | - | எதிர்ப்பு |
| கன்னி | - | பெருமை |
| துலாம் | - | சுபம் |
| விருச்சிகம் | - | ஆதரவு |
| தனுசு | - | பொறுமை |
| மகரம் | - | தேர்ச்சி |
| கும்பம் | - | உதவி |
| மீனம் | - | அன்பு |

**சுப நேரம்**
காலை: 10.35 -12.05
காலை: 03.15 - 05.45

**இராகு காலம்**
12.05
01.35

**எம கண்டம்**
09.05
10.35

# நபரொருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை

கொட்டிகாவத்த சந்தியில் நபரொருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியவில் வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டிகாவத்த சந்தியில் இந்த நபர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

42 வயதுடைய முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்தவரே இந்தக் கொலைச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கொட்டிகாவத்தை பிரதேசத்தில் உணவகமொன்றில் தொழில் புரிந்துள்ளதோடு, கொலைச் சம்பவம் இடம்பெற்றதற்கு முன்னைய தினத்தன்று அந்த உணவகத்துக்கு வந்த நபரொருவருடன் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினையால் இந்த கொலை இடம்பெற்றுள்ளது. இதேவேளை, இந்த கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்பகட்ட நீதிமன்ற விசாரணைகளும் அதன் பின்னராக மரண விசாரணைகளும் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புப்பட்டவர்கள் என்று சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள இருவரும் நேற்று அடையாள அணிவகுப்புக்கு உள்வாங்கப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## எட்டுப்பேரை..

(07ஆம் பக்கத்தொடர்ச்சி ...)

அறிவிப்பு ஏன் இன்னும் தாமதமாகின்றது?" என்று கடுந்தொனியில் வினவினார். "இன்னும் சில விநாடிகளில் அறிவிப்பு செய்யப்படும்" என்று பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் சொன்னபோது, "எத்தனை தடவைகள் நான் உங்களிடம் வந்து கேட்டுவிட்டேன், இதே பதிலை சொல்கின்றீர்கள். நான் இங்கிருந்து போகிறேன்" என்று ஆவேசமாகக் கூறி வெளியே சென்றார். அதை கேட்டபோதுதான் அவரும் அந்த அறைக்குள்ளே பல தடவைகள் வந்து பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகத்தரோடு பேசியிருக்கிறார் என்று எனக்குத் தெரியவந்தது.

நான் அந்த அறைக்குள் நுழைகையில் வெளியே பெரும் கூச்சல் குழப்பம் ஏற்படுவதை அவதானித்தேன். பலர் வாசலை மீறி உள்ளே புகுவதற்கு எத்தனித்தார்கள். அப்படி அவர்கள் புகுந்து குழப்பம் விளைவித்திருந்தால் தேர்தல் முடிவுகள் பற்றிய ஆவணங்கள் சேதப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால், அப்படியான அசம்பாவிதம் நடைபெறாமல் தடுத்து பொலிஸ் கலகம் அடக்கும் படையினரும் வெளியே தேர்தல் கடமையில் நின்ற பொலிஸ் அதிரடிப்படையினரும் அந்தக் கும்பலை விரட்டியடித்தார்கள்.

முடிவுகள் அறிவிக்கப்படுவது மேலும் தாமதமான காரணத்தால் நான் அங்கிருந்து வெளியேறி வீட்டுக்குச் சென்றுவிட்டேன். நான் சென்ற பின்னர் எமது கட்சியைச் சேர்ந்த க.குணாளனும், க.நாவலனும் வேறு பல இளைஞர்களுடன் இணைந்து ஸ்ரீதரனையும் சீ.வீ.கே.சிவஞானம் அவர்களையும் தகாத வார்த்தைகளால் திட்டியிருந்ததை நான் அறிந்தேன்.

எமது கட்சியில் முதலாமிடத்தை பெற்றவரை தோளில் தூக்கிவைத்து கொண்டாடியிருக்கவேண்டிய இளைஞர் அணியினர், பகிரங்கமாக அவரை தூஷித்தது எமது கட்சியிருக்கும் நிலையை வெளிப்படுத்துகிறது. கட்சி உறுப்பினர்களே எமக்கெதிராக செய்த பிரசாரத்தையும் முறியடித்து, சிறிதரனும் நானும் வென்றிருக்காவிட்டால் யாழ். தேர்தல் மாவட்டத்தில் எமது கட்சி ஓர் ஆசனத்தை மட்டும்தான் பெற்றிருக்கும். வெற்றிபெற்று கட்சியின் மானத்தைக் காப்பாற்றிய எமக்கெதிராக இன்றைக்கும் கட்சிக்குள்ளே சூழ்ச்சிகள் செய்யப்படுத்துவது கட்சியை மேலும் பலவீனப்படுத்தும் செயலாகும்.

வாக்குகள் முழுமையாக எண்ணப்படாத தருணத்தில் தமக்குக் கிடைத்ததாக சொல்லப்படும் உத்தியோகபூர்வமற்ற தகவல்களை வைத்துக்கொண்டு எமது கட்சி வேட்பாளர்களே விருப்பு வாக்கு எண்ணுதலில் மோசடி நடைபெற்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடுவது துரதிர்ஷ்டவசமானது.

இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் சில நூறு வாக்குகளால் தோல்வியடைந்த திரு. அருந்தவபாலன் இப்படியான சந்தேகத்தை வெளியிட்டிருந்ததும் 2015 தேர்தலில் சரவணபவன் தன்னுடைய வாக்குகளை களவாடிவிட்டதாக குற்றஞ்சாட்டியிருந்ததும் பலருக்கு நினைவிருக்கலாம். இந்தத் தடவை மூன்றாம் இடத்திலிருந்து தெரிவாகியிருந்த திரு. சித்தார்த்தனுக்கும் நாலாமிடத்திற்கு தள்ளப்பட்டதால் தோல்வியடைந்த திருமதி ரவிராஜுக்கும் கிடைத்த வாக்குகளின் வித்தியாசம் 700 மட்டுமே.

திருமதி ரவிராஜை விட எனக்கு 4,700 வாக்குகள் அதிகமாக கிடைத்திருக்கின்றன. அப்படியிருக்க, என்னுடைய தீர்க்கமான வெற்றியை கேள்விக்குட்படுத்தும் சூழ்ச்சியின் ஒரு பகுதியாக திரு. சித்தார்த்தனும் திருமதி ரவிராஜும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டாது அவர்கள் இருவரையும் விட 4,000இற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்ற எனது வெற்றியில் சந்தேகத்தை ஏற்படுத்திடுவதற்கான நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டிருக்கிறார்கள். என்னை தோற்கடிப்பதற்கானதும், வெற்றிபெற்றாலும் அந்த வெற்றியில் சந்தேகத்தை ஏற்றப்படுத்துவதற்கான நிகழ்ச்சிநிரலில் எமது வேட்பாளர்களும் இணங்கி செயற்பட்டதும் எமது கட்சியின் பாரிய பின்னடைவுக்கான முக்கிய காரணமாகும்.

இந்தக் கும்பலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களுடன் ஆதரவாளர்களோடு எமது கட்சியைச் சேர்ந்த இளைஞர்களும் இருந்ததை பின்னர் காணொளியில் அவதானித்தேன்.

இப்படியான பாரிய பின்னடைவை கட்சி சந்திப்பதற்கு காரணமாக இருந்த கீழ்வரும் நபர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

1. ஈ. சரவணபவன்
2. கே. வி. தவராசா
3. கருணாகரன் குணாளன்
4. கருணாகரன் நாவலன்
5. செல்வராசா பிரதாப்
6. பீட்டர் இளஞ்செழியன்
7. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன்
8. மிதிலைச் செல்வி ஸ்ரீபத்மநாதன்

மேற்சொன்னவர்களுக்கு எதிராக ஏற்கனவே உள்ள சாட்சியங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணையின்றி கட்சியிலிருந்து நீக்கப்படலாம். விசாரணையொன்று நடைபெற்றால் வேறும் பலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும்.

இது தொடர்பில் உடனடி சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் கட்சி மேலும் பின்னடைவைச் சந்திக்கும் என்பதை மனதில் கொண்டு துரித நடவடிக்கை எடுப்பது அவசியம் என்பதை வலியுறுத்தி நிறைவுசெய்கிறேன்.

**தங்களின் உண்மையுள்ள**
**ம.ஆ.சுமந்திரன் - பா.உ.**

1. **பிரதி:**
   **கௌரவ இரா. சம்பந்தன்**
   **தலைவர்**
   **தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**
2. **திரு. மாவை சேனாதிராஜா**
   **இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**
3. **மத்திய செயற்குழு உறுப்பினர்கள்**



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

# சீத்துவக்கேடு 62

ஆச்சி கள்ளுக் கூடாதெண்டு சொல்லி கன பாட்டுகளை சொல்லிப் போட்டு முதலில வளவுக்கை நிக்கிற உந்த சீவல் பனையளை தறிக்க வேணும். அப்பதான் நீ கள்ளுக் குடிக்கிறதை நிப்பாட்டலாம் எண்டு சொல்லவும், அப்பு காத்தில ஆடுற பனை மாதிரி எழும்பி ஆடத் தொடங்கிவிடுவார் .

என்னடி சொன்னனி. பனையைத் தறிக்கப் போறியோ. பனையைப் பற்றி உனக்கென்னடி தெரியும். பனை தமிழன்ரை அடையாளம் எல்லோ மொரீசியஸ், தென்னாபிரிக்கா, மலேசியா இந்தியா, இலங்கை எண்டு தமிழன் எங்கை எல்லாம் இருக்கிறானோ அங்கை எல்லாம் பனையள் இருக்கு கண்டியோ எண்டுவார். அதுமட்டுமில்லை மடகஸ்கார், இந்தோனேசியா, கம்போடியா, மியான்மர், தாய்லாந்து எண்டு முந்தி தமிழன் யாவாரத்துக்குப் போன ஆண்ட இடங்களிலை எல்லாம் பனைமரம் நிக்குது கண்டியோ எண்டுவார்.



தொல்காப்பியம் (57, 88, 572, 630), நற்றிணை (392, 303), குறுந்தொகை (182, 293, 372), ஐங்குறுநூறு (114), பதிற்றுப்பத்து (இரண்டாம் பத்து– 18), பா–பாடல் (10), கலித்தொகை முல்லைக்கலி (4–7, 15–1, 17–8, 83, 129, 138, 139:8–10, 141, 142), அகநானூறு (113, 120, 148, 365), புற நானூறு (45, 58, 61), சிறுபாணாற்றுப்படை (27), பெரும்பாணாற்றுப்படை (360), பட்டினப் பாலை (16–20,89), மணிமேகலை (17, 29), சீவகசிந்தாமணி (2053, 2227, 2526, 2763), கம்பராமாயணம் (4605), திருக்குறள (93), பழமாழிநானூறு (187, 270, 280), முதுமொழிக்காஞ்சி (7–3), பெரியதிருமடல் (78), சிறிய திருமடல் (2708, 2709, 2710), முத்தொள்ளாயிரம்(77) எண்டு எல்லா இடத்திலையும் பனையைப் பற்றி சொல்லி இருக்கு கண்டியோ .

கிருஷ்ணரின் அண்ணன் பலராமனின் கொடி, பனைக் கொடி எண்ட விசயம் தொல்காப்பியம் (உயிர் மயங்கியல் சூத்திரம்: பனை முன் கொடிவரின்...), கலித்தொகை (104–7), பரிபாடல் (2–22), புறநானூறு 56–4,58–14), எண்டு எல்லா புத்தகங்களிலையும் சொல்லிக் கிடக்கு தெரியுமே.

அதமாதிரி விபீசணனின்ரை கொடியும் பனைக் கொடிதான் எண்ட விசயமும், உவன் விபீசணன் இராமர் இலங்கையில இருந்து ஊருக்குத் திரும்பிப் போகேக்கை தங்கத்தால ஆன ஏழு பனை மரங்களைப் பரிசாக் குடுத்தானாம் எண்ட செய்தியும் இராமாயணத்தில இருக்கு கண்டியோ எண்டுவார் அப்பு.

கோவில்வழிய இருக்கிற சிற்பங்களில உள்ள மரங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதின குப்தா எண்ட ஒரு ஆராய்ச்சியாளர் தன்ரை புத்தகத்தில கர்நாடக மாநிலத்தில இருக்கிற அமிர்தேஸ்வரர் கோவிலில ராமபிரான் ஏழுபனை மரங்களைத் துளைச்ச காட்சி சிற்பமா இருக்கிறதாக எழுதி இருக்காம் கண்டியோ.



இதில இருந்து என்ன விளங்குது எண்டால் ராமன் தன்ரை பாணத்தை விட்டு துளைச்ச ஏழு மராமரம் எண்டது பனைமரம்தான்.

அதாலதான் உவன் விபீசணன் அதை ஞாபகப்படுத்த ராமனுக்கு தங்கத்தால செய்த ஏழு பனை மரங்களைக் குடுத்தானாம் எண்டு விசயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம கண்டியோ எண்டுவார் அப்பு. உதுமட்டுமே கம்போடியா நாட்டின்ரை தேசிய மரமாகவும், தமிழ்நாடு அரசாங்கத்தின்ரை தேசிய மரமாகவும் பனை இருக்கு கண்டியோ.



திருவோத்தூர் எண்ட கோவிலுக்கு கும்பிடப் போன திருஞானசம்பந்தர் பனையைப் பற்றி ஒரு பதிகமே (1.054) பாடியிருக்கிறார். அதுமட்டுமில்லை திருவோத்தூர் திருமழிசைப் பிரான் பாடிய திருசந்த திருசந்த விருத்தத்தம் (813 ), நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழி (3010, 4–1–4), திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருமொழி ( 1876, 10–3–9) எண்ட ஆழ்வார் பாட்டுகளிலையும் பனையளைப் பற்றிப் பெருமையா இருக்கு கண்டியோ.

“அனைய வேலை, அகல்மனை எய்தினள்
புனையும் சீரம் துணிந்து புனைந்தனள்
நினையும் வள்ளல் பின் வந்து, அயல் நின்றனள்
பனையின் நீள்கரம் பற்றிய கையினாள்”

எண்ட பாட்டிலை இராமனின்ரை கை பனை மாதிரி இருந்ததெண்டு கம்பர் சொல்லுறார் எண்ட விசயம் உன்னைப் போல ஆக்களுக்கு எப்பிடி விளங்கும் எண்டுவார்.

உதே கம்பர்தான் எழுதின சடகோபர் அந்தாதியில

“தீயைக் கிழித்தொரு திங்கள் கொழுந்தெனச் செய்ததல்லால்
பேயைக் கிழித்தென அன்றில் பனை பிளவார் உளவாம்
நோயைக் கிழிக்கும் வகுள நல்கார் இந்த நுண்பிறவி
மாயைக் கிழியைக் கிழித்தெம்மை வாங்கிட வல்லவரே”( 97).

எண்ட பாட்டில பனையை இழுத்து விடுகிறார் கண்டியோ அதால உந்தப் பனையை குறைவாக் கதைக்கிறதை இண்டையோட நீ நிப்பாட்ட வேணும் கண்டியோ இல்லாட்டில் கன பிரச்சினை வரும் எண்டுவார் அப்பு.

**(தொடரும்)**

# வடக்கு கூட்டுறவுச் சங்கங்கள் - நிறுவன செயற்பாடுகள் திருப்தியாக இல்லை!

வடமாகாண கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை – என்று வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மட்டுமல்ல, உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி என்பது கூட்டுறவுத் துறையின் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது.

சீனாவிலுள்ள பெரும்பாலான வங்கிகள் விவசாய வங்கிகளே. இத்தாலியிலுள்ள பெரும்பாலான பல்பொருள் அங்காடிகள் கூட்டுறவுத்துறையினரதே. அங்கிருக்கும் இறைச்சி, பற்பசை உட்பட அனைத்தும் கூட்டுறவுத்துறையின் தாயாரிப்புகளாகவே காணப்படுகின்றன .

எனவே, கூட்டுறவுத்துறை என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பாக அமைகின்றது. ஆனால், நமது மாகாணத்தில் அத்துறையொரு தோல்வியின் துறையாக மாறிக்கொண்டிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் முகாமையாளர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் ஒன்று வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சவால்களையும் கேட்டறிந்த ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், கூட்டுறவே நாட்டுயர்வு என்று கூறுவார்கள். அவ்வடிப்படையில் பார்த்தால் நமது மாகாணத்திலுள்ள பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் வளர்ச்சியடையாமலும் சில சங்கங்கள் இயங்காமலும் உள்ளதாக எனக்களிக்கப்பட்ட அறிக்கையினூடாக அறிந்துகொண்டேன்.

அப்படிப் பார்க்கும்போது மாகாண அரசு எவ்வளவு முயன்றும் முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. கூட்டு உறவாக இல்லாமல் தனிமனித சிந்தனையுள்ளவர்களாக நாமிருப்பதுதான் காரணமாக இருக்குமோவென நான் நினைக்கின்றேன்.

மக்களோடு இணைந்திருக்கும் ஒரு திணைக்களம்தான் இந்தக் கூட்டுறவுத் திணைக்களம். அதற்குப் பரந்த செயற்பாடுகளும் அதிகாரங்களும் இருக்கின்றன. அதனூடாக பல கடமைகள் இருக்கின்றன. நமது பொருளாதாரத்தையும் தமது வர்த்தக செயற்பாடுகளையும் வளர்த்தெடுப்பதற்கான கடப்பாடு கூட்டுறவுத்துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு துறையின் செயற்பாடுகள் சீரான முன்னேற்றப் பாதையில் இல்லையென்பதே கவலையளிக்கின்ற விடயமாகவுள்ளது.




சீரழிந்துபோயிருக்கின்ற நமது மாகாணத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்றால் மக்களோடு மக்களாகவிருக்கும் கூட்டுறவுத்துறையின் செயற்பாட்டில்தான் உள்ளது. தனிமனித செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் தவிர்த்துப் பொதுநலனில் அக்கறை கொண்டவர்களாக கூட்டுறவுத்துறையைச் சார்ந்தவர்கள் செயற்படவேண்டும்.

அப்போதுதான் மாகாணசபையின் ஒத்துழைப்பை தொடர்ந்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க இயலும். கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியின்மை தொடர்பான தெளிவானதும் துல்லியமானதுமான அறிக்கையை கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் எனக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியிலும் செயற்பாடுகளிலும் ஒத்துழைக்காத அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். நமது உற்பத்தி மற்றும் தேவைகள் பற்றிய ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கவேண்டும். நமக்குத் தேவையான அனைத்தையும் கூடுமானவரை நாமே உற்பத்திசெய்துகொள்ள வேண்டும். வெளியிலிருந்து கொள்வனவு செய்வதைக் குறைக்கவேண்டும். நமது உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலையும் நாமே செய்யவேண்டும். வெளிநபர்கள் அதைச் செய்வதைத் தவிர்க்கவேண்டும். தொழிற்றுறைகள் வளரவில்லை என்றால் ஆணையாளர்களும் பணிப்பாளர்களும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை கூட்டுறவுத் திணைக்களம் முன்னெடுக்கவேண்டும் – என்று தெரிவித்தார்.

## வடக்கு செய்திகள்

thamilannorth@yahoo.com

### யாழ். அச்செழு பாடசாலை நிர்வாக சீர்கேட்டுக்கு எதிராக போராட்டம்!




யாழ்ப்பாணம் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் நிர்வாக சீர்கேட்டுக்கு எதிராக நடவடிக்கையெடுக்க வலியுறுத்தி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

போராட்டத்தின் இறுதியில் தங்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஆளுநர் செயலகத்தில் கையளித்தனர். மேலும், தங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து விரைவாக தீர்வை வடக்கு மாகாண ஆளுநர் பெற்றுத்தர வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

# சர்வதேசமே... மௌனம் காப்பது ஏன்?







(மன்னார் நகர் நிருபர்)

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று மன்னாரில் காணாமலாக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் பஸார் பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றுகூடி பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

‘‘சர்வதேசமே மௌனம் காப்பது ஏன்?, இலங்கை அரசே உண்மையை மறைக்காதே. ஒரு நாள் நிச்சயம் வெளிவரும், காணாமலாக்கப்பட்ட உறவுகள் எங்கே, சர்வதேசமே புதிய அரசாங்கத்திடம் நீதியை பெற்றுத்தாருங்கள்’’ உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும், காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் பின்னர் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நினைவகமொன்றை அமைப்பதற்கு இடம் கோரி கையெழுத்துகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.



மேலும், மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பால் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜர் நேற்று போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலனிடம் கையளிக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் திருச்செல்வம் பரஞ்சோதி, உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் என பலர் இப்போராட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பரிசோதனையை புறக்கணித்த லியோனல் மெஸ்ஸி



காற்பந்து உலகில் பெயர்போன கழகங்களில் ஒன்றான பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி, வழமையான கொரோனா வைரஸ் பரிசோதனைக்கு சமுகமளிக்காததால் அவர் தொடர்ந்து பார்சிலோனா கழகத்தில் விளையாட முடியாமல் போகலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன.

33 வயதான ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த லியோனல் மெஸ்ஸி, பார்சிலோனா கழகத்துடனான தனது ஒப்பந்தத்தை இரத்துச்செய்ய விரும்புவதாகவும், உடனடியாக கழகத்தை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டும் எனவும் கடந்த வாரம் கழகத்திடம் தெரிவித்திருந்தார்.

லியோனல் மெஸ்ஸியுடனான ஒப்பந்தமானது கடந்த ஜூன் மாதமே முடிவடைந்துவிட்டதாக பார்சிலோனா கழகம் சார்பாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, ஒப்பந்தத்திலுள்ள விதிகளின்படி, 700 மில்லியன் யூரோவுக்கு 2021ஆம் ஆண்டு இறுதிவரை பார்சிலோனாவுக்காக விளையாட லியோனல் மெஸ்ஸி ஒப்பந்தம் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

லியோனல் மெஸ்ஸி கழகத்திலிருந்து வெளியேறுவதாக செய்தி வெளியானதைத் தொடர்ந்து அவருக்கு ஆதரவாக ஸ்பெயின் பார்சிலோனாவிலுள்ள மைதானத்திற்கு வெளியே கூடிய இரசிகர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது ஒருபுறம் இருக்க, பார்சிலோனா கழகத்தின் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் லியோனல் மெஸ்ஸி இவ்வாறு கொரோனா வைரஸ் சோதனைக்கு வரத் தவறியமையில் அவர் இனி கழகத்தில் விளையாட முடியாமல் போகலாம் எனக் கூறப்படுகிறது.




# ரெய்னாவுக்கு மாற்று வீரர் யார்? களத்தில் சி.எஸ்.கே. நிர்வாகம்

13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரானது எதிர்வரும் 19ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், தொடரில் பங்கேற்கும் முன்னாள் சம்பியனான இந்திய அணித்தலைவர் எம்.எஸ்.டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பல்வேறு சிக்கல்களை சந்தித்துள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் இரண்டு வீரர்கள் உள்ளிட்ட 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில், அணியின் முக்கிய அனுபவ துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னா திடீரென தொடரிலிருந்து விலகி நாடு திரும்பினார். இது சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

இந்நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தக்கவைக்கப்பட்ட வீரர்களில் ஒருவரான11 கோடி ரூபா (இந்திய ரூபா) சம்பளம் பெறும் சுரேஷ் ரெய்னாவுக்கு பதிலாக மாற்று வீரரை தெரிவுசெய்ய சென்னை சுப்பர் கிங்ஸ் நிர்வாகம் களமிறங்கியுள்ளது.

இந்திய வீரர்களான யூசுப் பதான், ஹனுமா விகாரி, மனோஜ் திவாரி மற்றும் மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த எவின் லுவிஸ் ஆகியோரது பெயர்கள் ரெய்னாவுக்கான மாற்று வீரர்களாக கூறப்படுகிறது. இதிலிருந்து ஒரு வீரர் தெரிவுசெய்யப்படுவார்.






சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதால், மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் சென்னை அணி விளையாடுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரானது இம்மாதம் 19ஆம் திகதி முதல் நவம்பர் 10ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியத்தின் மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளது. குறித்த தொடரில் பங்கேற்பதற்காக எட்டு அணிகளும் ஏற்கனவே ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுவிட்டன. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியைத் தவிர, ஏனைய ஏழு அணிகளும் பயிற்சிகளை ஆரம்பித்துவிட்டன.

தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் மூன்று வாரங்களுக்கும் குறைவான காலப்பகுதி உள்ள நிலையில் போட்டி அட்டவணை வெளியிடப்படாமல் உள்ளது. இந்நிலையில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தற்போது பல்வேறு சிக்கல்களைச் சந்தித்துள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் இரண்டு வீரர்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளாகியுள்ளதுடன், 11 அணி உதவியாளர்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்கொள்ளாகியுள்ளனர். மேலும் அணியின் முன்னணி வீரர்களில் ஒருவரான சுரேஷ் ரெய்னாவும் தனிப்பட்ட காரணங்களுக்காக தொடரிலிருந்து முழுமையாக விலகி நாடு திரும்பியுள்ளார்.

சென்னை அணியில் சிலருக்கு இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதன் காரணமாக வீரர்களால் பயிற்சிகளில் ஈடுபட முடியவில்லை. மேலும் ஒரு வாரம் தனிமைப்படுத்தலின் பின்னரே பயிற்சியில் களமிறங்க முடியும்.

2020ஆம் ஆண்டு இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் - முன்னாள் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோத திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது எழுந்துள்ள சிக்கல்கள் காரணமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஆரம்பப் போட்டியில் விளையாடாது என்று தகவல் வெளியாகியுள்ளது.

# பாகிஸ்தானை ஊதித் தள்ளிய இங்கிலாந்து !

## இயன் மோர்கன் அபாரம்

சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது இருபதுக்கு இருபது சர்வதேச போட்டியில் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையில் மூன்று டெஸ்ட் மற்றும் மூன்று இருபதுக்கு இருபது தொடர்கள் நடைபெறுகிறது. டெஸ்ட் தொடரை 1 - 0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது.



அடுத்த தொடரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் முதல் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. இந்நிலையில், இரண்டாவது இருபதுக்கு இருபது சர்வதேச போட்டி நேற்று முன்தினம் மென்செஸ்டரில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய மொஹமட் ஹபீஸ் 36 பந்துகளில் 69 ஓட்டங்களையும், அணித்தலைவர் பாபர் அஸாம் 56 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து 196 என்ற கடின இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணி, ஆரம்பம் முதலே அதிரடி காட்டியது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கானது கடின இலக்காக இருந்தாலும் அதை சாதாரணமாக எட்டியது, இங்கிலாந்து அணி. 19.1 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து பாகிஸ்தான் அணியை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் இயன் மோர்கன் அதிரடியாக வெறும் 33 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 6 பௌண்டரிகளுடன் அரைச்சதம் கடந்து 66 ஓட்டங்களைக் குவித்து இறுதிநேரத்தில் ஆட்டமிழந்தார். மேலும் டேவிட் மாலன் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களைக் குவித்தார். அதிரடியாக ஆடிய அணித்தலைவர் இயன் மோர்கன் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இந்த வெற்றியின்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரில் 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான தொடரின் மூன்றாவதும் இறுதியுமான இருபதுக்கு இருபது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

பார்படோஸ் ட்ரிடென்ஸ்ட் அணிக்கு எதிரான லீக் போட்டியில் கிரண் பொல்லார்ட் தலைமையிலான ட்ரிபான்கோ நைட் ரைடர்ஸ் அணி இறுதிநேரத்தில் த்ரில் வெற்றிபெற்று தொடர்ச்சியான ஆறாவது வெற்றியை பதிவுசெய்தது.

கிரிக்கெட் உலகில் நடைபெறும் இருபதுக்கு இருபது லீக் தொடர்களில் ஒன்றான மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் கரீபியன் பிரிமியர் லீக் தொடரின் எட்டாவது தொடர் தற்போது நடைபெற்றுவருகிறது. இதன் 17ஆவது லீக் போட்டியில் கிரண் பொல்லார்ட் தலைமையிலான ட்ரிபான்கோ நைட் ரைடர்ஸ், ஜேசன் ஹோல்டர் தலைமையிலான பார்படோஸ் - ட்ரிடென்ஸ்ட் அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ட்ரிபான்கோ நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய பார்படோஸ் ட்ரிடென்ஸ்ட் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஜொன்சன் சார்லஸ் 47 ஓட்டங்களையும், கைல் மேயர்ஸ் 42 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக குவித்தனர்.

149 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ட்ரிபான்கோ நைட் ரைடர்ஸ் அணி அணித்தலைவர் கிரண் பொல்லார்ட்டின் அதிரடி ஆட்டத்தின் மூலம் ஒரு பந்து மீதமிருக்க, 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்றது. அபாரமாக ஆடிய அணித்தலைவர் கிரண் பொல்லார்ட் 28 பந்துகளில் 9 சிக்ஸர்கள், 2 பௌண்டரிகளுடன் மொத்தமாக 72 ஓட்டங்களை விளாசினார்.

இவ்வெற்றியின் மூலம் 2020 கரீபியன் பிரிமியர் லீக் தொடரில் ட்ரிபான்கோ நைட் ரைடர்ஸ் அணி தொடர்ந்து ஆறாவது வெற்றியை பதிவுசெய்தது. இதன்மூலம் புள்ளிப்பட்டியலில் 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் காணப்படும் ட்ரிபான்கோ நைட் ரைடர்ஸ் அணி இன்று தங்களது அடுத்த போட்டியில் ஜமைக்கா தலவாஸ் அணியை எதிர்கொள்கிறது.




# கரப்பந்தாட்ட வீரர்களுக்கு இலவச சீருடை வழங்கிவைப்பு









தலவாக்கலை பாமஸ்டன் ரட்ணகிரிய பிரதேச யங் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர் வேலு மோகனினால் அக்கழகத்தின் கரப்பந்தாட்ட வீரர்களுக்கான சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வு அண்மையில் பாமஸ்டன் ரட்ணகிரிய கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது. (தலவாக்கலை பி. கேதீஸ்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7